ஜனநாயக இயக்கமும் தொழிலாள வர்க்கத் தலைமையும்

அஜய் கோஷ்

(மொழிபெயர்ப்பு—முகவை ராஜமாணிக்கம்)

V2,4 N25
N55
111879

க்தி பிரசுராலயம்
சென்னை-14.

ஜனநாயக இயக்கமும் தொழிலாள வர்க்கத் தலைமையும்

அஜய் கோஷ்

ஜனசக்தி பிரசுராலயம்,
3, அந்தோணி தேரு,
சென்னை-14.

அக்டோபர் '54] [விலை 6 அணா

பதிப்புரை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்காரியதரிசி தோழர் அஜய் கோஷ், மாதப் பத்திரிகையான 'நியூ ஏஜ்'ன் 1954 எப்ரல், ஜுன் இதழ்களில் "ஜனநாயக இயக்கமும் தொழிலாள வர்க்கத் தலைமையும்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை களின் மொழிபெயர்ப்பாகும் இந் நூல்

ஜனநாயக இயக்கமும் தொழிலாள வர்க்கத் தலைமையும்

நமது கட்சியின் 3வது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானம் — ஒரு ஜனநாயக ஒற்றுமை சர்க்கார் என்ற கோஷத்தை முன்வைத்தது. இன்றைய காலகட்டத்தில், "இன்று நடைபெறும் சகல போராட்டங்களும் சென்றடைய வேண்டிய குறிக்கோளை" உணர்த்துகின்ற பிரதான கோஷமாகும் அது.

அத்தகைய ஒரு ஜனநாயக ஐக்கிய சர்க்கார் எவ்வாறு உருவாகும் என்பதை விளக்குவதற்காக தீர்மானத்தில் வலியுறுத்தப் பட்டிருப்பதாவது:

"ஜனநாயக ஐக்கிய சர்க்கார் என்ற கோஷம்—பொதுஜனப் போராட்டங்களை மிக விரிந்த அளவிற்கு திட்டமிட்டு நடத்துவதற்கு உதவுகின்ற கோஷம் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆளும் வர்க்கங்களின் பொருளாதார, அரசியல் கொள்கைகளைத் தோற்கடிப்பதற்காக நடக்கும் உறுதியான போராட்டத்தின் மூலமாகவும், விளைவாகவும் மக்களின் வாழ்க்கைத் தரத்திலும், உரிமைகளிலும், சுதந்திரத்திலும் ஆளும் வர்க்கங்கள் தொடுக்கின்ற தாக்குதல்களை முறியடிப்பதன் மூலமாகவும்தான் இது சாத்தியமாகும். ஆகவே, தொழிலாளிகள், விவசாயிகள், மாணவர்கள், இதர வர்க்கங்கள், ஜனப்பகுதிகள் ஆகியோரின் உடனடியான, அவசியமான கோரிக்கைகளுக்கான போராட்ட அடிப்படையில் அத்தகைய ஒரு இயக்கத்தை முடுக்கிவிடுவதுதான், மிகவும் வலிமைபொருந்திய பொதுஜன ஸ்தாபனங்களைக் கட்டுவதும், கட்சியை பலப்படுத்துவதும்தான் இன்றைய மிக முக்கியமான கடமை. வளர்ந்துகொண்டே வரும் நெருக்கடியின் காரணமாகவேதான், வெகுஜன தொழிற் சங்கங்கள், விவசாய சங்கங்கள் ஆகியவற்றின் தலைமையில் நடத்தப்படும் பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டத்தின் முக்கியத்துவம், இதற்குமுன் கண்டறியாத அளவுக்கு இன்று அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டு சரித்திரம் மெய்ப்பிப்பது போல, இத்தகைய போராட்டங்களின் மூலமாகத்தான், சக்தி கட்டவிழ்த்து விடப்படும்; ஐக்கியம் உருவாகும்; வெற்றிக்கு உத்தரவாதமளிக்கப்படும். அப்பொழுதுதான், காங்கிரசிற்கு உள்ளே எழுந்துள்ள முரண்பாடுகளையும், பொதுஜனங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்

திக்கொள்ள முடியும். இந்த நிலைமையைப் பார்க்க மறுத்தால்—நடைமுறைக்கு ஒவ்வாத கோஷங்கள் கிளம்பும்; உடனடியான கடமைகளிலிருந்து மக்களின் கவனம் வேறு திசைக்குத் திருப்பப்படும்; தலைவர்களுக்கு இடையே மட்டும் பேச்சுவார்த்தை நடத்துவதிலும், பேரம் பேசுவதிலும் நம்பிக்கை கொள்ள ஏதுவாகும்; பொதுஜன இயக்கம் பலவீனப்படும்."

கட்சியின் பொதுவான கடமைகளை, கீழ்க்கண்டவாறு தீர்மானம் வரையறுத்துக் கூறுகின்றது:

"ஜனநாயக இயக்கத்தின் வெற்றிக்கு ஆதாரமாக நடைமுறையில் நிறைவேற்ற வேண்டிய பிரிக்க முடியாத முப்பெருங் கடமைகள்—கட்சியைக் கட்டி வளர்த்தல்; பொதுஜன ஸ்தாபனங்களைக் கட்டி வளர்த்தல்; ஜனநாயக அணியைக் கட்டி வளர்த்தல் ஆகியவையாகும். இந்தக் கடமைகளை எந்த அளவுக்கு ஒன்றுகூட்டி, இணைந்து நிறைவேற்றுகிறோமோ, அந்த அளவுக்கு நெருக்கடியின் சுமைகளை மக்கள்மீது திணிக்க முற்படும் அரசாங்கத்தின் முயற்சிகளும், ஆளும் வர்க்கங்களின் நடவடிக்கைகளும் முறியடிக்கப்படும்; பொதுஜன இயக்கம் பலமடைந்து வளர்ந்து விரிந்து, அதன் குறிக்கோளை எய்தும்.

இந்த வரையறுப்புக்கள் சரியென, கடந்த சில மாதங்களில் நடைபெற்ற சம்பவங்கள் நிரூபித்துள்ளன. இந்த வரையறுப்புக்களை மேலும் ஸ்தூலப்படுத்தி, விளக்க வேண்டியது அவசியமாகும். இந்தக் கடமையை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு, மத்தியக் கமிட்டிக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனநாயக முன்னணி ஒரு தனித்த கடமையல்ல

இதற்கு முதற்படியாக, கட்சியின் அடிப்படைக் கடமை என்ன என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டியது அவசியமானதாகும். இதற்கு முன்னர் பலதடவைகளில் இதைச் செய்திருக்கிறோமே, அப்படிச் செய்து இந்தப் பிரச்னையில் கட்சிக்குள்ளாக ஒரு ஒருமித்த உணர்வு ஏற்பட்டிருக்கிறதே என்று சிலர் விவாதிக்கக் கூடும். ஆனால் உண்மை அதுவல்ல. இன்றும்கூட, இந்த அடிப்படைக் கடமையைப் பற்றியே பரந்த அளவுக்குக் குழப்பம் நிலவுகின்றது. இதற்கு உதாரணமாக, ஒரு மாகாணக்கமிட்டி, அதன் மகாநாட்டில் சமர்ப்பித்த அரசியல் ரிப்போர்ட்டில் காணப்படும் கீழ்க்கண்ட வரையறுப்பைக் கவனித்தால் விளங்கும்:

> "இந்தக் கட்சியின் திட்டம், ஜனநாயக முன்னணியைக் கட்டுவதே நம்முன் எழுந்துள்ள மிகப் பிரதான கடமையாகும் என்ற தெளிவான உணர்வை நமக்கு ஊட்டியுள்ளது."

இந்தமாதிரி வாசகம் நமது பல ரிப்போர்ட்டுகளிலும் கட்டுரையிலும் காணப்படுகின்றது; இது, நமது பிரதான கடமையை

உணர்த்துகின்ற சரியான விளக்கம் என்று பொதுவாக கட்சி அணிகளால் கருதப்படுகின்றது. ஆனால் இது யதார்த்தமா ?

இல்லை. இத்தகைய வியாக்கியானம்—கட்சியின் நிலைமையைத் திரித்துக் கூறுவதாகும்; இந்திய ஜனநாயக இயக்க வரலாறு தரும் பிரதான படிப்பினையைப் புறக்கணிப்பதாகும். ஜனநாயக முன்னணியைக் கட்டினால்மட்டும் போதாது என்பதுதான் அந்தப் படிப்பினை. ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக, ஜனநாயக முன்னணி கட்டப்பட வேண்டியதாதலால், ஒரு குறிப்பிட்ட முறையில் அது கட்டப்பட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், பெரியசாதனை எதையும் செய்ய முடியாது, அந்த ஜனநாயக அணியால்.

தேசிய காங்கிரஸ் ஒரு ஜனநாயக அணியைக்கட்ட முயற்சித்தது அதில் பெருமளவுக்கு அது வெற்றியும் பெற்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. 1919க்கும் 1947க்கு மிடையே தேசிய ஐக்கியம் என்ற ஒரு முற்போக்கு உணர்வு இந்தியாவில் படிப்படியாக வளர்ந்தது. அந்த இயக்க வட்டத்திற்குள், புதிய பகுதிகள் ஆகர்ஷிக்கப்பட்டன. போராட்டக் களத்தில், புதிய வர்க்கங்கள் வந்துபுகுந்தன. சுதந்திரத்திற்காக அடுத்தடுத்து நடந்த பொதுஜனப் போராட்டத்தின் ஒவ்வொரு அலையும் தேசிய இயக்கம் மேலும் மேலும் விரிந்து பரந்து உரம்பெற்று வளர்ந்தது என்பதை வெளிப்படுத்திற்று. இவ்வாறிருந்தும், தேசிய இயக்கம்—பரிபூரண விடுதலை, ஜனநாயகம் என்ற தனது குறிக்கோளை அடையத் தவறியது; சிறுமைக்குரிய சமரசத்திலே சென்று முடிந்தது.

காங்கிரஸ் அமைத்த ஐக்கிய அணி-சீர்திருத்தவாத ஐக்கிய அணியாதலால்தான், அந்த முடிவு ஏற்பட்டது. அது நடத்திய இயக்கம்-பொதுஜனத்தன்மை வாய்ந்திருப்பினும், பிரதானமாக சீர்திருத்தப் பாதையிலேயே செலுத்தப்பட்டது. சௌரிசாரா, பெஷாவர், ஷோலாப்பூர் ஆகிய இடங்களில் நடந்த சம்பவங்கள், இந்திய தேசிய சைன்ய ஆர்ப்பாட்டங்கள், இந்திய கப்பற்படை எழுச்சி ஆகியவை பொதுமக்களின் போரிடும் ஆற்றல்களையும் அந்த சூழ்நிலையின் புரட்சிகரமான சாத்தியப்பாடுகளையும், சந்தேகத்திற்கிடமின்றி வெளிப்படுத்தின. ஆனால், இயக்கம் முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், ஒரு சமயத்தில்கூட, இந்தச் சாத்தியப்பாடுகள் நடைமுறைக்கு வரவில்லை.

முதலாளித்துவத்தின் தலைமை நடத்திய தேசிய இயக்கத்தின் அம்சங்கள்

தேசியத் தலைமையின் வர்க்கத் தன்மையே இதற்குக் காரணம் என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். ஏகாதிபத்தியத்துடன் தேசிய முதலாளித்துவத்திற்கு முரண்பாடு இருந்தது; அந்த

முரண்பாட்டைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த அது விரும்பியது. தேசிய ஐக்கியத்தை, ஒரு குறிப்பிட்ட தன்மை கொண்ட தேசிய ஐக்கியத்தை – அதாவது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்மீது நிர்ப்பந்தத்தைக் கொண்டுவந்து, சமரச உடன்பாட்டுக்கு வர உதவும்படியான ஐக்கியத்தைக் கட்ட விரும்பியது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட தன்மை வாய்ந்த பொதுஜன இயக்கத்தை வளர்த்தது. அந்த இயக்கமும், போடப்பட்ட எல்லைக்கோட்டை மீறிப் பரவிவிடும் என்ற அபாயம் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டதும், நிறுத்தப்பட்டது; அல்லது அதற்குத் தடைகள் விதிக்கப்பட்டன. இது எல்லோருக்கும் தெரிந்ததே. இயக்கத்தைச் சீர்திருத்தவாதப் பாதையில் கொண்டு செல்வதில் வெற்றியடைந்தது என்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். இதற்குக் காரணம், அந்த இயக்கமே, தேசிய முதலாளித்துவத் தலைமையின்கீழ் சில குறிப்பிட்ட அம்சங்களை வெளிப்படுத்தியதுதான்.

அந்த அம்சங்கள் யாவை? அது தேசிய முதலாளித்துவத்தால் வழி நடத்திச்செல்லப்பட்ட இயக்கம் என்ற உண்மை ஸ்தூலமாக எப்படி வெளிப்பட்டது?

அந்த இயக்கத்தின் விசேஷ அம்சம் என்னவென்றால்: தெளிவாக விளக்கப்பட்ட குறிக்கோள்கள் எதுவும் கிடையாது; ஸ்தூலமான திட்டம் எதுவும் கிடையாது. சுயராஜ்யம், பூரண சுயராஜ்யம், விடுதலை என்ற பதங்கள் அடிக்கடி முழங்கின; ஆனால் அவற்றின் ஸ்தூலமான அரசியல் உள்ளடக்கமோ, குறிப்பாக தேவைப்படும் சமூக மாறுதல்கள் என்ன, பொருளாதார மாறுதல்கள் என்ன என்பதைப் பற்றிய விளக்கமோ தெளிவாக்கப்படவில்லை. எந்த லட்சியத்தை அடையவேண்டும், எப்படி அதை அடைவது என்பதைப்பற்றிய தெளிவு கிடையாது. அரசியல் அரங்கில் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ சித்தாந்தங்கள் ஆதிக்கம் செலுத்தின. பொது மக்களிடையே விரிந்த அளவுக்கு விழிப்பேற்பட்டிருந்தும், காங்கிரஸ் தலைவர்களாலும் காங்கிரஸ் அணிகளாலும் நடத்தப்பட்ட கிளர்ச்சி ஸ்தூலத் தன்மையற்றதாயிருந்தது; அத்தகைய கிளர்ச்சி வெகுஜனங்களின் ஞானத்தை போதிய அளவுக்கு வளர்க்கவோ, அவர்களது அரசியல் தரத்தை உயர்த்தவோ செய்யவில்லை.

அந்த இயக்கத்தின் இரண்டாவது விசேஷ அம்சம்: தொழிலாளர்கள், விவசாயிகளை உள்ளிட்டு, சகல வர்க்கங்களும், இயக்கத்தில் கலந்துகொண்டாலும், இயக்கத்துக்குப் பிரதான பலமும் ஆதரவும் அளித்த வர்க்கங்கள்—நகரங்களிலுள்ள குட்டி பூர்ஷுவாக்களும், கிராமப்புறங்களிலுள்ள மேல்தர, மத்தியதர விவசாயப் பகுதிகளும் ஆவர். இந்த இயக்கத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம், நகரங்களிலுள்ள தொழிலாளர்களும், கிராமப் புறங்களிலுள்ள ஏழை விவ

சாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் - மக்களின் பெரும் பகுதியினர்-செயல்படும் தன்மையுள்ளதாக இல்லாமல், பிரதானமாக குட்டி பூர்ஷுவாக்கள் செயல்படும் தன்மை கொண்டதாக இருந்ததுதான்.

மூன்றாவது சிறப்பு அம்சம் என்னவென்றால்—மக்களின் உடனடிக் கோரிக்கைகளுக்கு ஆதரவான நடவடிக்கைகள், பொதுஜன அரசியல் இயக்கத்தின் ஒரு அங்கமாக ஆகவில்லை. அரசியல் எழுச்சி அலைமோதுகின்ற காலங்களிலும், மக்கள் பொதுவான தீவிரத் தன்மை பெறுகின்றபோதும், தொழிலாளர்கள், விவசாயிகளின் எண்ணற்ற பொதுஜன நடவடிக்கைகள் நடந்தன என்பது உண்மையே. சில சமயங்களில், 1932ல் ஐக்கிய மாகாணத்தில் நடந்தது போல, "வரிகொடாப்"ப் போராட்டம், வரிகுறைப்புப் போராட்டம், காங்கிரஸ் கமிட்டிகளால் ஆதரிக்கப்பட்டது உண்மையேயாயினும், பூரண சுயராஜ்யத்திற்கான பொது அரசியல் போராட்டமானது, தொழிலாளர்கள், விவசாயிகளின் தினசரி பொருளாதாரப் போராட்டங்களிலிருந்து திட்டவட்டமாக தனியே பிரித்து வைக்கப்பட்டிருந்தது. அரசியல் போராட்டங்களும், பொருளாதாரப் போராட்டங்களும் ஒன்றாகப் பிணைவதையும், மிகவும் அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் பொதுஜன இயக்கத்தில் வந்து கலப்பதையும் இது தடுத்தது.

இயக்கத்தின் நான்காவது சிறப்பு அம்சமாவது—போராட்டத்தின் பிரதான உருவம் சத்தியாக்கிரகமே யொழிய, தொழிலாளர்களின் பொதுஜன வேலைநிறுத்தம், நிலத்திற்காகப் போராடுகின்ற விவசாயிகளின் பொதுஜனப் போராட்டம் ஆகிய தீவிர பொதுஜன நடவடிக்கையல்ல. அந்த அரசியல் போராட்டம் மேற்கொண்ட பிரதான ரூபங்கள்—மறியல், உப்புக்காய்ச்சுதல், தடையை மீறுதல் ஆகியவையாகும். பலதடவைகளில், தொழிலாளர்களின் பொதுஜன அரசியல் வேலைநிறுத்தங்கள் நடக்கத்தான் செய்தன. பொதுஜன விவசாயப் போராட்டங்கள் வெடிக்கத்தான் செய்தன; ஆனால் அத்தகைய பொதுஜன நடவடிக்கைகளுக்குப் பொதுவாக உற்சாகமளிக்கப்படவில்லை; போராட்டத்தின் பிரதான ரூபமாக அவை என்றும் கையாளப்படவேயில்லை.

இயக்கத்தின் ஐந்தாவது சிறப்பு அம்சமாவது—போராட்டத்தின் வெகுஜன போராட்ட ஸ்தாபன வடிவங்கள் (popular organs of struggle) உருவாகவில்லை; ஒவ்வொரு ஸ்தலத்திலும் "சர்வாதிகாரிகள்" என்றழைக்கப்பட்டவர்கள் தலைமையில் இயக்கம் நடந்தது; கைதி செய்யப்பட்ட சர்வாதிகாரி, தனக்கு அடுத்த வாரிசை நியமிப்பார்.

இயக்கத்தின் ஆறாவது சிறப்பு அம்சம்—இயக்கம் தன்னிச்சையாக நடப்பதில் நம்பிக்கைவைத்தது. இது, இயக்கத்தைத் திட்ட

மிட்டு விரிவுபடுத்தவும், பலப்படுத்தவும், இயக்கத்தை அடுத்த கட்டத்துக்கு உயர்த்திக்கொண்டுபோவதற்கும் எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படாததில் காணப்பட்டது. அடக்குமுறையை சமாளிப்பதற்குரிய உறுதியான ஸ்தாபன நடவடிக்கைகளும், இதர அவசியமான நடவடிக்கைகளும் எடுக்காது விடப்பட்டதிலும் இதைக் காணலாம். இதன் விளைவாக, தேசியப் போராட்டத்தின் முழுச் சரித்திரத்தையும் எடுத்துக்கொண்டுபார்த்தால்—ஒரு சாதாரண (ஆரம்ப) எழுச்சி என்ற அம்சத்தை அது தாங்கியிருந்ததே ஒழிய, எதிரியின் திட்டங்களை முறியடிக்கும் அளவுக்குப் போதுமான பலமுடைய இயக்கமாக என்றும் அது இருந்ததில்லை. இதை 1932லும், 1942லும் தெளிவாகக் கண்டோம். "ஒப்பந்தம்" எதுவும் ஏற்படவில்லை. ஆனால், அதேசமயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் கொடிய அடக்குமுறையின் மூலம் பொதுஜனப் போராட்டத்தையே நசுக்குவதில் வெற்றி பெற்றது.

ஏழாவது சிறப்பு அம்சம்—அந்த இயக்கத்தின் தலைவனாக விளங்கிய தேசிய காங்கிரசானது, ஒரு பிரத்தியேகமான வேலைமுறையைக் கைக்கொண்டது. பொதுஜன எழுச்சிப் பேரலை வீச முற்படும் காலகட்டங்களில் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது; அதன் அணிகள் அனைத்தையும், அதன் ஆதரவாளர்களையும் நடவடிக்கைகளில் பங்குகொள்ளும்படிச்செய்வது; ஆனால் சாதாரண காலங்களில், தினசரிக் கடமைகளைக்கூடச் செய்யாமல், பேசாமல் இருந்துவிடுவது. அத்துடன், தனக்கே உரித்தான ஒரு விசேஷமான ஸ்தாபன அமைப்பையும் காங்கிரஸ் ஏற்படுத்திக்கொண்டது—சகல முடிவுகளைகளையும் சில தலைவர்களே எடுப்பது; சாதாரண ஊழியர்களின் முன்முயற்சிக்கு இடமில்லாதது; கீழேயுள்ள அடிப்படைக் கமிட்டிகளை தீவிரமாக இயக்காதது.

காங்கிரசின் தலைமையில் நடந்த தேசிய இயக்கத்தின் மிக முக்கிய விசேஷமான அம்சங்களாகும் மேலே கூறியுள்ளவை. இந்த அம்சங்கள் அனைத்தும், தேசியத் தலைமையின் வர்க்க குணம்சத்திலிருந்து பிறந்த நேரடி விளைவுகளாகும். இந்த அம்சங்கள் தான் தேசிய இயக்கத்தை—லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான இந்திய மக்களின் புரட்சிகரமான இயக்கமாக உருவாகாமல் தடுத்ததோடு, அந்த இயக்கம் தோற்றுப் போவதற்கான நிலைமைகளையும் சிருஷ்டித்தன.

முதலாளித்வத் தலைமையின்கீழ் வளர்ந்த தேசிய இயக்கத்தின் விசேஷமான அம்சங்களை ஸ்தூலமாகக் கற்றறிய வேண்டும் என்ற கடமையில் போதிய கவனம் செலுத்தாமலிருக்கும் போக்கு நமது கட்சியில் தென்படுகிறது. தேசியப் போராட்டத்திற்கு பூர்ஷுவாக்கள் துரோகமிழைத்தது என்பது எல்லோருக்கும் பச்சையாகப் புலப்படத்தான்

செய்கிறது. ஆயினும், அந்தத் துரோகச் செயல் மிகவும் மேலெழுந்த வாரியாகத்தான் பார்க்கப்படுகிறது. பர்தோலி சத்தியாக்கிரகம் வாபஸ் வாங்கப்பட்டது, வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொண்டது, மவுண்ட் பாட்டன் தீர்ப்பை ஏற்றுக்கொண்டது ஆகிய குறிப்பான நடவடிக்கைகள் மூலம்தான் புரிந்துகொள்ளப்படுகிறது. இத்தகைய துரோக நடவடிக்கைகள் நிகழாதிருந்தால், போராட்டம் வெற்றிக் கட்டத்தை அடைந்திருக்கும் என்றுகூட சிலசமயம் வற்புறுத்திக் கூறப்படுகிறது. இது தவறாகப் புரிந்துகொள்வதாகும். பர்தோலி சத்தியாக்கிரகம் வாபஸ் வாங்கப்பட்டது போன்ற குறிப்பிட்ட நடவடிக்கைகள், துரோகப் படலத்தின் உச்ச நடவடிக்கைகள் என்று கூறுவதுதான் பொருந்தும். துரோக நடவடிக்கைகளில் மட்டுமல்ல, அதன் விசேஷ அம்சங்களிலிருந்து வெளிப்படும் இயக்கத்தின் தன்மையிலிருந்தே, தலைமையின் பூர்ஷுவாத் தன்மை நன்கு வெளியானது.

இந்த அம்சங்களைப் புறக்கணித்து, புதிய அம்சங்களைக் கையாண்டிருந்தால்தான், இயக்கம் தோல்வியில் கொண்டுபோய் விட்டிருக்க முடியாது, அல்லது சமரசத்தில்போய் முடிந்திராது. போராட்டத்தின் இறுதி முடிவு போராட்டத்தை நடத்துகின்ற தலைவர்களின் தன்னுடைய எண்ணத்தைப் பொறுத்தது மட்டுமல்ல; அல்லது, தீவிரமான போராட்ட ரூபங்களை மாத்திரம் பொறுத்தது மல்ல. தேசீய இயக்கமானது - சத்தியாக்கிரகப் போராட்ட ரூபங்களை மாத்திரம் கைக்கொண்டதால்தான் வெற்றி பெறவில்லை என்று நினைப்பதுவும் தவறு. பூர்ஷுவா தலைமையின் கீழ் நடந்த தேசிய இயக்கம் எத்தகைய அம்சங்களைக் கொண்டிருந்தது என்பதை ஒட்டுமொத்தமாகவும் அவற்றுக்கிடையே நிலவும் உறவின் அடிப்படையிலும் அறிந்து உணரவேண்டும். அதைச் செய்யாவிட்டால், தவறான முடிவுகளுக்குத்தான் வருவோம். உதாரணமாக, தேசிய இயக்கத்தின் ஒரே ஒரு அம்சத்தில் மட்டும் கவனம் செலுத்தி - அதாவது சத்தியாக்கிரகத்துக்குப் பதிலாக, தீவிரப் போராட்ட ரூபங்களைக் கைக்கொண்டிருந்தால், எதிரியைத் தோற்கடித்திருக்கமுடியும் என்று நினைக்கலாம்; ஆனால் அத்தகைய முடிவுக்கு வருவது தவறு என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். வெறும் தீவிரத்தன்மை மட்டும்—அந்த இயக்கத்துக்குப் பொதுஜன ஆதரவு இருப்பினும், எதிரி நெருக்கடியில் சிக்கியிருக்கும்போது அந்த இயக்கத்தைத் தொடங்கினாலும்—வெற்றிக்கு உத்தரவாதமளித்துவிட முடியாது.

"செயலில் இறங்கு அல்லது செத்துமடி" என்று 1942-ல் காங்கிரஸ் தலைமை கொடுத்த கோஷத்திலும், அந்தப் போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது பல தீவிர நடவடிக்கைகள் நடந்ததிலும் இதைக் காணலாம். 1921ல் வாபஸ் பெறப்பட்டதுபோல இந்த இயக்

கம் வாபஸ் வாங்கப்படாததும் நாமறிந்ததே. இவையெல்லாமிருந்தும், இயக்கம் முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், பூர்ஷுவாத் தலைமையில் நடக்கும் சீர்திருத்தவாத இயக்கத்தின் பிரத்யேக குணம்சங்களை அது கொண்டிருந்தது; அதனால்தான் ஏகாதிபத்தியத்தை அது தோற்கடிக்க முடியவில்லை.

ஆகவே, ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் ஒரு இயக்கம் மாத்திரமல்ல இந்தியாவில் தேவைப்படுவது; ஒரு பொதுஜன புரட்சிகரமான இயக்கம்தான் தேவை என்பது தெளிவாகப் புரியும். ஆகவேதான், ஸ்தூலமற்ற ஒரு ஜனநாயக அணியைக் கட்டுவது, கம்யூனிஸ்ட் கட்சியின் கடமையாக முடியாது.

ஒரு புரட்சிகரமான இயக்கத்திற்கு இருக்கவேண்டிய அம்சங்கள்

அப்படியாயின், தொழிலாளி வர்க்கத்தின் முன்பாகவும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு முன்பாகவும் இருக்கும் கேந்திரமான கடமைதான் என்ன? இந்தக் கேள்விக்கு தோழர் ஸ்டாலின் தனக்கே உரித்தான தெளிவும், துல்லியமும் நிறைந்த பதிலை அளித்துள்ளார். கீழ்நாட்டு உழைப்பாளிகள் சர்வகலா சங்கத்தில் அவர் நிகழ்த்திய பிரசங்கத்தில் உள்ள கீழ்க்கண்ட வார்த்தைகளில் உள்ளன அந்த பதில்:

"......இந்தியாவைப் போன்ற காலனி நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தை, விடுதலை இயக்கத்தின் தலைமைப் பாத்திரமாகத் தயாரிக்கும் பிரச்சினை இது; தயாரித்து, பூர்ஷுவாக்களை இந்த கௌரவமிக்க ஸ்தானத்திலிருந்து படிப்படியாக அகற்றுவதாகும் இது; புரட்சிகரமான ஒரு ஏகாதிபத்திய—எதிர்ப்பு அணியை சிருஷ்டித்து, அந்த அணிக்குள்ளாகவே தொழிலாளி வர்க்கத்தின் தலைமைக்கு உத்தரவாதமளிப்பதுதான் கடமையாகும்."

இதற்கு ஸ்தூலமான அர்த்தம் என்ன? சுதந்தரம், ஜனநாயகத்திற்கான ஒரு பொதுஜன புரட்சிகரமான இயக்கத்தை வளர்த்தாக வேண்டும் என்பதுதான் அதற்குப் பொருள். இத்தகைய ஒரு இயக்கத்தின் அம்சங்கள், பூர்ஷுவா தலைமையில் நடைபெறும் சீர்திருத்தவாத பொதுஜன இயக்கத்தின் அம்சங்களுக்கு முற்றிலும் மாறுபட்டதா யிருக்கும்.

1. பொதுமக்களனைவருக்கும் அல்லது ஒரு பெரும்பகுதி மக்களுக்கு குறிப்பாக தொழிலாளி வர்க்கம், விவசாயப் பாட்டாளிகள் ஆகியவர்களுக்கும்—சுதந்தரம் என்பது பிரிட்டிஷ் அதிகாரிகளையும், பிரிட்டிஷ் ராணுவத்தையும் மட்டும் வெளியேற்றுவதல்ல என்று உணர்த்தவேண்டும்; அத்துடன், நமது பொருளாதாரத்தின்மீது உள்ள

பிரிட்டிஷ் நூல்வலைப் பிடிப்பையும் உடைத்தெறிய வேண்டும்; நிலப் பிரபுத்வத்தை அறவே ஒழித்துவிட வேண்டும்; ஒரு ஜனநாயக அரசை நிறுவவேண்டும்—அதுதான் சுதந்திரம் என்று உணர்த்தவேண்டும்; இவைகளெல்லாம் செய்யப்படாவிட்டால், அவர்களது வாழ்க்கையில் உண்மையான முன்னேற்றங்கள் ஏற்பட முடியாது என்பதையும் உணர்த்தியாக வேண்டும். பொதுமக்களின் அரசியல் தரத்தை உயர்த்தவேண்டும்; சித்தாந்த-அரசியல்பணி மூலமாகவும், தீவிர அரசியல் பணி மூலமாகவும், தீவிர அரசியல் கிளர்ச்சியின் மூலமாகவும் பொதுஜனங்களின் அரசியல்ஞான தரம் உயர்த்தப்படவேண்டும்.

2. பல வர்க்கங்களையும் கொண்ட ஒரு ஒன்றுபட்ட இயக்கமாக அது விளங்கவேண்டும்; ஏனென்றால், எல்லாவற்றிற்கும் மேலாக, ஜனநாயக அணி என்பது வர்க்கங்களின் அணியாகும். சகல ஏகாதிபத்திய-எதிர்ப்பு வர்க்கங்களையும், மக்கள் பகுதிகளையும்—பூர்ஷுவா, குட்டி-பூர்ஷுவாக்களை உள்ளிட்டு—தேசிய இயக்கத்தில் இழுத்தாக வேண்டும். ஆனால் இந்த இயக்கம், மிகவும் அடக்கி ஒடுக்கப்படும் வர்க்கங்கள், பகுதிகளைச் சேர்ந்த மக்களான—தொழிலாளர்கள், விவசாயிகள்—குறிப்பாக ஏழை விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும்கொண்ட வெகுஜனப் பகுதிகளை மேலும்மேலும் அதிகமாகஅடிப்படையாகக்கொண்டு, அவற்றிலிருந்து தனது பிரதான பலத்தைப் பெறவேண்டும். மேலும், அவர்களது நடவடிக்கைதான், இயக்கத்தின் மிக முக்கியமான குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கவேண்டும்.

3. சகல ஜனநாயக வர்க்கங்களையும் ஒன்று திரட்டும் அதே சமயத்தில், தொழிலாள வர்க்க, விவசாய மக்களின் ஒற்றுமைதான், ஜனநாயக அணியின் அச்சாக விளங்கவேண்டும். இந்த வர்க்கங்கள் ஒவ்வொன்றையும், மற்ற வர்க்கத்தின் கோரிக்கைகள், போராட்டங்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளின்மீது திரட்டுவதன் மூலம் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக தொழிலாளர்களின் வெகுஜன நடவடிக்கையை உருவாக்குவதன் மூலம் இந்த ஒற்றுமை காரியாம்சத்தில் கட்டப்படவேண்டும்.

4. அரசியல், பொருளாதாரப் போராட்டங்களை சேர்ந்தாற்போல் நடத்திச் செல்லவேண்டும்; பொதுஜனங்களின் அன்றாடக் கோரிக்கைகளுக்கான போராட்டத்தை, சுதந்திரத்திற்கான தேசியப் போராட்டத்தோடு இணைந்த போராட்டமாக ஆக்கவேண்டும். அப்பொழுதுதான், 1905-ம் வருடத்து ருஷ்யப் புரட்சி வரலாறு எடுத்துக்காட்டுவதுபோல, விரிந்த வெகுஜனப் பகுதியை இயக்கத்தில் இழுக்க முடியும். தொழிலாளர்களின், விவசாயிகளின் பொதுஜன நடவடிக்கைகள் – தொழிலாளர்களின் பொதுஜன வேலை நிறுத்தங்களும், நிலத்திற்காக விவசாயிகள் மேற்கொள்ளும் பொதுஜன நடவடிக்கைகளும் – போராட்டத்தின் பிரதான ரூபமாக ஆகவேண்டும்.

5. போராட்டத்தை நடத்துவதற்குப் போராடும் மக்கள் பகுதிகளிடையேயுள்ள மிகத் தீவிரமான, மிகவும் உணர்வு பூர்வமான, எந்த விதத் தியாகத்திற்கும் தயாராயுள்ள நபர்களைக்கொண்ட ஸ்தாபனங்களை நிறுவவேண்டியது அவசியம்.

6. தானாக நடக்கும் என்று நம்பியிராமல், திட்டமிடப்பட்ட முறையில் இயக்கத்தை புதிய பிரதேசங்களுக்கும், புதிய வர்க்கங்களுக்கிடையேயும் கொண்டுசென்று விரிவுபடுத்தவேண்டும்; கட்டத்துக்குக் கட்டம் உறுதியாக இயக்கத்துக்குத் தலைமை தாங்கவேண்டும். அடக்குமுறையை எதிர்த்துப் போராடுவதற்கும், கொடிய அடக்குமுறை நடக்கும் சூழ்நிலைகளிலும் பொதுஜன வேலையைச் செய்து கொண்டு போவதற்கும் உரிய உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

7. பொதுஜனங்களிடையே இடைவிடாத ஒழுங்கான பணி புரிவதற்கான, தொடர்ந்து பொதுஜனங்களுக்கு பயிற்சியளித்து ஸ்தாபனத்தில் திரட்டி வெகுஜன முன் முயற்சியை வளர்க்கக்கூடிய ஸ்தாபனங்களைக் கட்டவேண்டும்.

இத்தகைய விசேஷ அம்சங்களை இயக்கம் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாகத்தான், தொழிலாள வர்க்கத் தலைமை தேவைப்படுகிறது. அப்பொழுதுதான் லெனின் கூறியது போல "ஒரு உண்மையான பொதுஜன இயக்கமாகவும், உண்மையான புரட்சிகரமான இயக்கமாகவும்" அது விளங்கும்.

இத்தகைய விசேஷ அம்சங்களை, இயக்கத்திற்கு அளிப்பதற்கான போராட்டம், தொழிலாள வர்க்கத் தலைமையை ஏற்படுத்துவதற்கான போராட்டமுமாகும்.

இந்தப் போராட்டம் நடத்தப்படவேண்டுமானால் அது பொதுமக்களிடையே ஆழமாக வேரூன்றியுள்ள பலம் பொருந்திய ஒரு கம்யூனிஸ்ட் கட்சியினால்தான் முடியும். அதிகாரத்தைக் கைப்பற்றும்படியான ஒரு புரட்சிகரமான எழுச்சிப் போராட்டமாக, இந்தப் பொதுஜன இயக்கம் வளருவதற்கான அம்சங்கள் தானாகவே ஏற்பட்டு விடாது; அல்லது, பொதுஜனங்கள் தீவிரத்தன்மையடைவர் என்ற தன்னிச்சையான போக்கின் விளைவாகவும் ஏற்பட்டுவிடமுடியாது. ஆகவேதான், ஒரு புரட்சிகரமான இயக்கம் வளர்வதற்கும், அது வெற்றியடைவதற்கும், ஒரு பொதுஜன கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியமைப்பது என்பது தவிர்க்க முடியாத நிபந்தனையாகிறது. அத்தகைய ஒரு கட்சியைக் கட்டிவளர்ப்பதென்பது, பூர்ஷுவாக்களுக்கு எதிராக நடத்தப்படும் கடுமையான சித்தாந்தப் போராட்டத்தினால்தான் முடியும்; தொழிலாளி வர்க்கத்தினிடையிலும், வளர்ச்சியடைந்துள்ள மக்கள் பகுதிகளிடையேயும் சோஷலிச உணர்வை ஊட்டி உரப்படுத்

அவதனுல்தான் முடியும்; பொதுமக்களிடையேயிருந்து மிகவும் உணர்வுபூர்வமான, தீவிரமான நபர்களை, கட்சிக்குள் தைரியமாகக் கொண்டுவரும் கொள்கையைக் கடைப்பிடிப்பதால்தான் முடியும். அத்துடன் இந்த வர்க்கங்களை பலனுள்ளமுறையில் ஒன்றுதிரட்டுவதற்கு தொழிலாளர்கள், விவசாயிகளின் பலம்பொருந்திய பொதுஜன ஸ்தாபனங்கள் மிகவும் அவசியம்.

பூர்ஷுவாக்களோடு ஐக்கிய முன்னணி அமைப்பதென்பது சாத்தியமும், அவசியமுமாகும்; ஏனெனில், பூர்ஷுவாக்களுக்கு ஏகாதிபத்தியத்தோடு முரண்பாடு உள்ளது. அவர்கள் தேசிய ஐக்கியத்தை விரும்புகிறார்கள். ஆனல், அதேசமயத்தில் ஐக்கிய முன்னணி, பூர்ஷுவாக்களுக்கு எதிராகவும் போராடவும்வேண்டியிருக்கின்றது; ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுக்காக ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி, ஒரு குறிப்பிட்ட தன்மைகொண்ட தேசிய ஐக்கியத்தை முதலாளித்வம் விரும்புகின்றது; இத்தகைய தேசிய ஐக்கியம் பெரும்பகுதி மக்களின் நலன்களுக்கு உகந்ததல்ல; மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமானல், ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்வத்தையும் அழித்தொழிப்பதால்தான் சாத்தியமாகும்.

தேசிய முன்னணிக்குள்ளேயே, தலைமைக்குரிய போராட்டத்தை நடத்தியாக வேண்டும். ஸ்தூலமாகச் சொன்னல், தேசிய இயக்கத்தை அதன் முதலாளித்துவ-சீர்திருத்தவாத அம்சங்களிலிருந்து விடுவிக்கும்படியான போராட்ட ரூபத்தை அது மேற்கொண்டு, தேசிய இயக்கத்திற்கு ஜன சம்மந்தமான புரட்சிகர அம்சங்களை அளித்திருக்கும்.

இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவெனில், ஒரு பொது ஜன புரட்சிகர இயக்கத்தை வளர்ப்பதும், ஒரு சக்திவாய்ந்த ஜனநாயக முன்னணியையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் கட்டி வளர்ப்பதும், இந்த முன்னணிக்குள்ளாக தொழிலாள வர்க்கத் தலைமையை நிலைநாட்டுவதும்—ஆகியவை ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத அல்லது தனித்தனியான கடமைகள் அல்ல என்பதாகும்.

ஜனநாயக முன்னணி, தொழிலாளவர்க்கத் தலைமை ஆகியவைபற்றிய தவருன கருத்துக்கள்

குறிப்பாக இதைத்தான், நாம் எப்பொழுதும் நன்கு புரிந்து கொள்வதில்லை. ஜனநாயக முன்னணியைக் கட்டும்படியான கடமை ஒரு சுயேச்சையான கடமை என்றும், தொழிலாள வர்க்கத் தலைமையை ஏற்படுத்துவதினின்றும் தனிமைப்பட்ட ஒரு கடமை என்றும் பல தடவைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழிலாள வர்க்

கத் தலைமையையே சிறுமைப்படுத்தி, திரித்துக்கூறும் முறையில் பல தடவைகளில் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது. சிலதடவை களில், இது, தேசீய ஒற்றுமை என்ற பெயரால் முதலாளித் துவத் தலைவர்களைப் புகழ்ந்து போற்றுவதில வெளிப்பட்டுள்ளது; "ஐக்கிய முன்னணியைப் போல காங்கிரஸைக் கட்டவேண்டும். காங்கிரஸைத் திறம்படக் கட்டுகின்றவர்களாக கம்யூனிஸ்ட்கள் முயன்று ஐக்கிய முன்னணியைக் கட்டவேண்டும்", "தேசீய ஒற்றுமை என்பது காங்கிரஸ்-லீக் ஒற்றுமையாகும்" "காங்கிரசுக்கும் லீகுக்கு மிடையே ஒரு பாலம் போன்று கம்யூனிஸ்ட்கள் நடந்து கொள்ளவேண்டும்" என்பன போன்ற தத்துவங்களை வெளியிடு வதன்மூலம் இது வெளிப்பட்டுள்ளது. அத்துடன், மற்றும் சில வேளைகளிலும், தொழிலாள வர்க்கத் தலைமை வார்த்தையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், அசல் குட்டி-பூர்ஷுவா முறை யில், கட்சியாலும், அதன் அணிகளாலும் "உறுதியான தலைமை" "தீவிரமான செயல்" என்ற அடிப்படையான பிரச்சினையாக வைக் கப்பட்டதே யொழிய, ஒரு குறிப்பிட்ட தன்மைகொண்ட, குறிப் பிட்ட அம்சங்கள் நிறைந்த ஒரு பொதுஜன இயக்கமாக வளர்கின்ற பிரச்சினையாக வைக்கப்படவில்லை.

இத்தகைய தவறான கருத்துக்களின் மிக பயங்கரமான ரூபம்—மிக முக்கியமான கடமைகள்மீது போதிய கவனம் செலுத்தப்படாத தன்மூலம்—வெளிப்பட்டது. அந்தக் கடமைகளை நிறைவேற்றுவது தான், தொழிலாள வர்க்கத் தலைமையை நிலைநாட்டுவதற்கு அவசியம்; பூர்ஷுவாக்களுக்கு எதிரான சித்தாந்தப் போராட்டத்திற்கு அவ சியம்; மிகவும் அடக்கி ஒடுக்கப்பட்டு சுரண்டப்படும் பகுதிகளை பிர தான அடிப்படையாகக் கொண்டு, தொழிலாளர்கள், விவசாயிகளின் பொதுஜன ஸ்தாபனங்களைக் கட்டுவதற்கு அவசியம்; தொழிலாள வர்க்கத்தினிடையே அரசியல் உணர்வை ஊட்டி வளர்த்தலுக்கு அவ சியம்; ஒரு வெகுஜன கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவதற்குஅவசியம்.

இந்தப் பிரச்சினை-ஜனநாயக முன்னணியும், தொழிலாளவர்க்கத் தலைமைக்கும் அதற்குமுள்ள உறவும் என்ற பிரச்சினை இன்று பெரும் முக்கியத்துவம் உடையதா? ஆம், முக்கியத்துவமுடையதுதான். இன்று அதன் முக்கியத்துவம், முன்னிருந்ததைவிடக் குறைந்துவிட வில்லை; ஏனென்றால், ஸ்டாலின் நிர்ணயித்துள்ளபடி, ஜனநாயக இயக்கத்தின் பிரதான கடமையை இனிமேல்தான் சாதிக்கவேண்டி யிருக்கின்றது. கடந்தகாலத்தில் வெகுஜன இயக்கத்தில் முக்கிய மாகக் காணப்பட்ட பல குறைபாடுகள் இன்னும் நிலவிவருகின்றன. இன்றைய இயக்கம், காங்கிரஸ் அரசாங்கங்களுக்கு எதிராக திருப்பி விடப்பட்டாலும், காங்கிரஸ் தலைமையில் இருந்த தேசீய இயக்கம் கொண்டிருந்த குறிப்பிடத்தக்க பல அம்சங்களைக் கொண்டுள்ளது.

அது இன்னும், ஒரு பொதுவான புரட்சிகரமான இயக்கத்தின் தன்மையை அடையவில்லை.

ஜனநாயக இயக்கத்தைக் கட்டுவதை ஒரு சுயேச்சையான கடமையாக, மற்ற அனைத்தையும் இதற்கு உட்படுத்தியாகவேண்டும் என்ற கடமையாக நோக்குகின்ற போக்கு, நமது கட்சியில் இன்னும் மிகவிரிந்த அளவிற்குப் பரவியுள்ளது; இந்தப் போக்கு அடிக்கடி வெளிப்படுகின்றது. இது, மேல்மட்டத்தில் நடக்கும் பேச்சுவார்த்தையை வலியுறுத்துவதிலும், "இடதுசாரி ஒற்றுமை" போன்ற கோஷங்களை வலியுறுத்துவதிலும்மட்டும் தென்படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, கட்டப்படவேண்டிய முன்னணி, தேசிய காங்கிரஸ் கட்டிய முன்னணியிலிருந்து வித்தியாசப்பட்டது என்பதை மறந்துவிடும் போக்கிலும், இந்த வித்தியாசம், புரட்சிகரமான வாசகங்களில் மட்டுமல்ல, அது ஒரு "போராட்ட முன்னணி"யாக இருக்க வேண்டும் என்பதில்மட்டுமல்ல என்பதை மறந்துவிடும் போக்கிலும் தென்படுகின்றது. காங்கிரசும் ஒரு போராட்ட முன்னணியைக் கட்டியது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது காங்கிரஸ் கட்டிய முன்னணிக்கும், இன்று கட்டப்படவேண்டிய முன்னணிக்கும் இடையேயுள்ள வித்தியாசம், இன்று பொதுஜன இயக்கம் மேற்கொள்ளவேண்டிய ஸ்தூலமான அம்சங்களிலும் அடங்கிக்கிடக்கின்றது. இவை, குறிக்கோளைப் பொறுத்ததாயும், பொதுஜனங்களிடையே—குறிப்பாக தொழிலாளவர்க்கத்திடையேயும், முன்னேற்றமடைந்துள்ள பகுதிகளிடையேயும் அந்த குறிக்கோளைப் பற்றிய தெளிவிலும், அவர்களது உணர்ச்சி மட்டத்தைப் பொறுத்தமாயுமுள்ள அம்சங்களாகும். இந்த அம்சங்கள் இயக்கத்திற்குப் பிரதான பலத்தை அளிக்கும்படியான வர்க்கங்களை உட்கொண்டதாகும்; அந்த வர்க்கங்களின் செயல்தான், இயக்கத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் கொண்டதாகும்; அரசியல், பொருளாதாரப் போராட்டங்களை இணைப்பதற்குரிய விஸ்தரிப்பு ஆகும்; பொதுஜன நடவடிக்கைகளின் உருவங்களாகும்; பொதுஜனப் போராட்டங்களின் போதும், பொதுஜனப் போராட்டங்களை நடத்துவதற்காகவும் சிருஷ்டிக்கப்படும் கருவிகளாகும்.

இந்த அம்சங்களனைத்தும் வளரவில்லையானல், இன்றைய இயக்கம், அதன் குறிக்கோளை அடைய முடியாது; தோல்வியிலும், துரோகத்திலும்தான் முடியும். மேலும், காங்கிரசுக்கு இடதுசாரிக் கட்சியோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியோ பிரதான எதிரியாக இருப்பதால் மட்டும், இன்று இந்தப் போராட்டங்களை நடத்திக்கொண்டிருப்பதால் மட்டும், இந்த அம்சங்கள் தானகவே இயங்கி வளராது. இடதுசாரிகளாலோ அல்லது கம்யூனிஸ்டுகளாலோ நடத்தப்படும் ஒரு பொதுஜன இயக்கமானது, காங்கிரசால் நடத்தப்படும் இயக்கமாக-

குட்டி பூர்ஷுவாக்களிடமிருந்து பிரதான பலம் பெற்றுள்ள ஒரு வெகுஜன சீர்திருத்தவாத இயக்கமாக - அதே அடிப்படைத்தன்மை கொண்டதாக இருக்கலாம். அத்தகைய ஒரு இயக்கம், அதன் தலைவர்கள் கூறும் சகல புரட்சிகரமான "நோக்கங்களை" யெல்லாம் மீறி, துரோகமும், தோல்வியும் கொண்ட அதே விளைவுகளுக்குத்தான் இட்டுச்செல்லும்.

ஆகவே, முன்னர் குறிப்பிட்டுள்ளபடி, புரட்சிகரமான அம்சங்கள்தான், வெகுஜன இயக்கத்திற்கும், தன்னிச்சையாக வளர்ந்து வரும் மக்களின் எழுச்சிக்கும் உணர்வு பூர்வமாக ஊட்டப்பட வேண்டியவையாகும். இதை எந்த அளவிற்குச் செய்கிறோமோ, அந்த அளவுக்கு ஒற்றுமை ஏற்படுத்தப்படும்; ஜனநாயக முன்னணி கட்டியமைக்கப்படும்; அந்த அளவுக்கு தொழிலாள வர்க்கத் தலைமையும் நிலைநாட்டப்படும். இதுதான், பிற்போக்கை எதிர்த்து வெற்றி பெறுவதற்கான தவிர்க்கமுடியாத நிபந்தனையாகும். ஆகவே, இதுதான் கம்யூனிஸ்ட் கட்சி முன்புள்ள கடமையாகும்.

இதிலிருந்து, கம்யூனிஸ்ட் கட்சியானது, அதன் சொந்த பலத்தின் அடிப்படையில் ஒரு பொதுஜன புரட்சிகரமான இயக்கத்தை வளர்க்க முற்படுமானால், ஜனநாயக முன்னணி தானாகவே கட்டியமைக்கப்பட்டுவிடும் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. இத்தகைய ஒரு இயக்கம் வளருவதே ஒரு நடைமுறையாகும். அத்தகைய ஒரு இயக்கம் கொண்டிருக்க வேண்டிய சகல குறிப்பிடத்தக்க அம்சங்களையும், ஒரேயடியாக அல்லது நாம் விரும்பிவிட்டால் மட்டும் அடைந்துவிடமுடியாது. அவற்றைப் படிப்படியாகத்தான் அடையமுடியும்; பொதுஜனங்களின் அனுபவ வளர்ச்சி மூலமாகவும், அவர்களது உணர்ச்சிக்குப் புதுமெருகிடுவதன் மூலமாகவும், அவர்களது ஸ்தாபனங்களை பலப்படுத்துவதன் மூலமாகவுந்தான் அடையமுடியும். இது மக்களின் இன்றைய உணர்வின் அளவையும், அவர்களது இன்றைய பலத்தையும் அடிப்படையாகக்கொண்டு, செயல்முறையில் ஐக்கியத்தைக் கட்டுவதாகும்.

மூன்றாவது கட்சிக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானம் சுட்டிக்காட்டுவதுபோல்:

ஏகாதிபத்யத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் ஒழித்துக் கட்டுவதின் மூலமே, தமது நலன்களைத் திறம்பட முன்னேற்றிக் கொள்வது சாத்தியம் என்றுள்ள சகல வர்க்கங்கள், சக்திகளின் ஐக்ய அணியே ஜனநாயக அணியாகும். மக்களை எதிர்நோக்கும் உடனடியான பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களின் அடிப்படையில், மிகவும் விரிவான வெகுஜன இயக்கத்தை வளர்ப்பதன் மூலமே, அதைக் கட்டியெழுப்ப முடியும். வெகுஜனங்கள் பல்

வேறு அரசியல் கட்சிகளின் செல்வாக்கின்கீழ் பிரிந்து கிடக்கும் நிலையில், தொழிலாளி வர்க்கம் பிளவுண்டுள்ள நிலையில், ஒவ்வொரு பிரச்சினையின்பேரிலும் போராட்டக் கோரிக்கைகள், கோஷங்கள் சம்பந்தமாகவும் கட்சிகள், ஸ்தாபனங்களுக்கிடையே ஏற்படும் ஐக்ய அணி ஒப்பந்தம், பொது நடவடிக்கையில் மக்களை ஈடுபடுத்துவதில் ஒரு சக்திமிக்க அம்சமாக விளங்குகிறது. இத்தகைய ஐக்ய அணி, காங்கிரஸைப் பின்பற்றும் வெகுஜனங்களையும்கூட பொதுப்போராட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு உதவுகிறது. எனவே, கம்யூனிஸ்ட் கட்சி ஒவ்வொரு பிரச்னையிலும் இத்தகைய உடன்பாடுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை தொடர்ந்து எடுப்பதுடன், தீவிரப்படுத்துவதும் அவசியமாகும். அதேசமயத்தில், தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளி மக்களையும் ஒன்றுபடுத்துவதிலும் திரட்டுவதிலும் கம்யூனிஸ்ட் கட்சி தனது சுயேச்சையான பாத்திரத்தை நிறைவேற்றுவதைப் பொறுத்தே ஐக்கிய அணி வளர்ச்சியடையும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

"உதாரணமாக கல்கத்தாவில் டிராம்வே கட்டண உயர்வை எதிர்ப்பதற்காக அமைக்கப்பட்டது போன்ற குறிப்பிட்ட ஐக்கிய போராட்டங்களை நடத்துவதற்காக அமைக்கப்படும் ஐக்கியக் கமிட்டிகள்-எல்லோருடைய பொதுவான ஒப்புதலின்பேரில் முடிவுகள் செய்யும் பல்வேறு கட்சிகள், ஸ்தாபனங்கள், சக்திகளைக்கொண்ட இக்கமிட்டிகள்—வெகுஜன இயக்கத்தை பலப்படுத்துவதற்கும், மேலும் விரிவுபடுத்துவதற்கும் உதவுகின்றன என்பதை அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. மேலும், தொழிலாளிகள், விவசாயிகள், இன்னும் மற்ற பகுதிகளின் ஒன்றுபட்ட வெகுஜன ஸ்தாபனங்களை கட்டுவதற்கும் வளர்ப்பதற்கும்கூட, அவை உதவிபுரிகின்றன. இவ்வாறு பிரச்சினைக்குப் பிரச்சினை ஒன்றுபட்டு கூட்டாக வெகுஜனப் போராட்டங்களை தலைமை தாங்கி நடத்துவதும், பொதுவாக வெகுஜன ஸ்தாபனங்களில் ஒன்று சேர்ந்து வேலை செய்வதும் இன்னமும் நெருக்கமான ஐக்கிய அணிக்கு உகந்த நிலைமைகளை சிருஷ்டிக்கும்.

"மேலும், ஐக்கிய அணி என்பது கம்யூனிஸ்ட் கட்சியையும், இடதுசாரிக் கட்சிகளையும் மாத்திரம் கொண்டதல்ல; எல்லாவற்றிற்கும் மேலாக காங்கிரஸின் செல்வாக்கின் கீழ் இன்னும் இருந்துவரும் மக்களை உள்ளிட்ட வெகுஜனங்களைக் கொண்டதாகும். எனவே, ஏராளமான காங்கிரஸ்காரர்களையும், பிரஜா-சோஷலிஸ்டுகளையும், முற்போக்கான தனி நபர்களையும் போராட்டங்களிலும், பொதுஜன நடவடிக்கையிலும் ஈடுபடுத்துவது, ஐக்கிய அணி இயக்கத்தின் வளர்ச்சிக்கு அவசியமாகும். காங்கிரஸ் தலைமையின் பிற்போக்குக் கொள்கையையும், பி. சோ. க. தலைமையின் சீர்குலைவுக் கொள்கையையும் காரணமாகக் காட்டி, சகல காங்கிரஸ்காரர்களையும், சகல பி. சோ.

க. உறுப்பினர்களையும் பிற்போக்கானவர்கள் என்று கருதும் போக்கை எதிர்த்துப் போராடவேண்டும். நெருக்கடியும், வெகுஜனப் போராட்டங்களும் வளர்ந்துள்ள நிலையில். காங்கிரஸ்—பி. சோ. க. தலைமைகளின் கொள்கைகளைப்பற்றி வெகுஜனங்களிடையில் ஏற்பட்டுவரும் ஆசாபங்கமும் வளர்ந்துவரும் நிலையில், ஆசாபங்கமடைந்த காங்கிரஸ்காரர்களையும், பி. சோ. கட்சி மக்களையும் போராட்டங்களிலும், பொது நடவடிக்கையிலும் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்கனவே ஏற்பட்டுள்ளதுடன், வருங்காலத்திலும் அவை மேலும் அதிகரிக்கும்.'

அதே சமயத்தில், ஒன்றுபட்ட பொதுஜன இயக்கம்கூட—இடதுசாரி, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழுள்ள ஒரு ஒன்றுபட்ட பொதுஜன இயக்கம்கூட—அது, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு பொதுஜன புரட்சிகரமான போராட்டத்திற்குரிய குறிப்பிடத்தக்க அம்சங்களைப் பெறவில்லையானால், பலவீனமாக இருக்கும், கீழ் மட்டத்தில் இருக்கும் என்பதை உணர்ந்துகொள்வது அவசியமாகும். இந்த அம்சங்களை உணர்வு பூர்வமாக ஊட்டிக்கொண்டேயிருக்கவேண்டும்.

இந்த உணர்வின் வெளிச்சத்தில்தான், நாட்டின் பலபாகங்களிலும் இன்று வளர்ந்துள்ள இயக்கத்தை கட்சி எடைபோட்டுப் பார்க்கவேண்டும்; அதன் விசேஷ அம்சங்களைப் பரிசீலனை செய்யவேண்டும். இந்த உணர்வின் வெளிச்சத்தில்தான், பொதுஜன இயக்கத்தை பலப்படுத்தி, விஸ்தரிக்க என்னென்ன குறிப்பிடத்தக்க கடமைகளை மேற்கொள்ளுவது என்று கட்சிமுடிவு செய்யவேண்டும்.

II

பிற்போக்கு சக்திகளை முறியடிக்க எதிர்ப்புக் கட்சிகளின் ஒற்றுமை மட்டும் போதாது

1952-ல் நடந்த பொதுத் தேர்தல்களில் காங்கிரசின் செல்வாக்கு மிகவும் சரிந்து விட்டதைக் கண்டதும், அதிலிருந்து மிகவும் மேலெழுந்தவாரியான முடிவுகளுக்கு வரத்துணிந்தவர் பலர். எதிர்கால தேர்தல்களில் "ஜனநாயக வாக்குகள் பிளவுபடாமல்" மட்டும் பார்த்துக்கொண்டால் அதன் விளைவாக காங்கிரசை தோற்கடித்து, ஓட்டுப்பெட்டி மூலமாகவே ஒரு ஜனநாயக சர்க்காரை நிறுவமுடியும் நிச்சயமாக என்று விவாதிக்கத் தொடங்கினர். அதாவது ஜனசங்க், இந்து மகாசபா போன்ற கட்சிகளை ஆதரிப்பவர்களைத் தவிர, காங்கிரசுக்கு எதிராக வாக்களித்த அனைவரும் இடதுசாரியை ஆதரிக்கக் கூடியவர்களே என்று அவர்கள் கருதினார்களென்பது இதற்கு அர்த்தம். ஆகவே, இடதுசாரி கட்சிகள் ஒன்றுபட்டால், அவற்றின் பதாகைகளின் கீழ் சகல பகுதி மக்களும் திரண்டு நிற்பர் என்று கணிக்கத் தொடங்கிவிட்டனர்.

இம்மாதிரியான வடிகட்டிய சீர்திருத்தவாத கண்ணோட்டம் யதார்த்தத்தின் அடிப்படையில் எழுந்ததல்ல என்பதை சம்பவங்கள் நிரூபித்துள்ளன. காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுக்களை கட்டிவளர்ப்பதை மட்டும் கொண்டு தேர்தல் கணக்கைப் 'பரிசீலனை செய்யும்' முறை முழுக்க முழுக்கத் தவறு என்பதை, யதார்த்த சம்பவங்கள் நிரூபித்துள்ளன. காங்கிரசின் வெகுஜன அஸ்திவாரத்தைத் தகர்த்து கலகலக்க வைக்கவும், மக்களின் பெரும்பகுதியை நம் பக்கம் இழுக்கவும் "இடதுசாரி ஐக்கியம்" மட்டும் போதாது; வேறு சிலவும் தேவைஎன்பதை சம்பவங்கள் நிரூபித்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக; மக்களின் உறுதியான போராட்டமும், செயல்முறையில் பொதுஜன ஐக்கியம் ஏற்படுதலும்தான் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்து, ஜனநாயக அமைப்புகளை நிலைநிறுத்த முடியும் என்பதையும் நடைமுறைச் சம்பவங்கள் நிரூபித்துள்ளன.

திரு-கொச்சி ராஜ்யத்தில்தான் 1952-ல் நடந்த பொதுத் தேர்தல்களில் காங்கிரசுக்கு மிகப் பெரிய தோல்வி ஏற்பட்டது. 107 ஸ்தானங்களில் காங்கிரசுக்கு 44 ஸ்தானங்கள்தான் கிடைத்தன; 36 சதவிகித வாக்குகள்தான் கிடைத்தன. கடந்த இரண்டு ஆண்டு காலமாக அந்த ராஜ்யத்தில் பொருளாதார அல்லல்கள் மிக கோரமாக உருவெடுத்தன. சமீபத்தில் நடந்த தேர்தல்களில், கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சி சோஷலிஸ்ட் கட்சி, கேரள சோஷலிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி ஆகியவை கூட்டாகச் சேர்ந்து காங்கிரசை எதிர்த்தன. ஆயினும் இவையெல்லாமிருந்தும், காங்கிரசுக்கு 45 சதவிகித ஓட்டுகள் கிடைத்தன—அதாவது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பொதுத் தேர்தல்களில் கிடைத்ததைவிட 9 சதவிகிதம் அதிகமாகக் கிடைத்துள்ளன; திரு-தமிழக காங்கிரஸ் கட்சி என்ற மற்றொரு வலதுசாரி கட்சிக்கு 6 சதவிகித ஓட்டுகள் கிடைத்துள்ளன.

இது ஏன் ஏற்பட்டது? ஏனெனில், பொதுவாக, காங்கிரஸ், தனது வெகுஜன அஸ்திவாரத்தை காப்பாற்றிக் கொள்ள முடிந்தது; அதோடு, வலதுசாரி கட்சிகளான-கொச்சி கட்சி, குடியரசுக் கட்சி ஆகியவை மறைந்ததும், பல சுயேச்சை அபேட்சகர்கள் பேட்டியிடாததும், கத்தோலிக்க மத ஸ்தாபனங்களின் ஆதரவு கிடைத்ததும் (காங்கிரசையும், இடதுசாரிக் கட்சிகளையும் தோற்கடித்த திரு-தமிழக காங்கிரஸ் கட்சி போட்டியிட்ட தமிழ்ப் பிரதேசங்கள் நீங்கலாக) ஆகியவற்றின் காரணமாக, காங்கிரஸ் ஸ்தாபனத்தின் கீழ்; பிற்போக்கு சக்திகள் திரண்டு உருவாகும்படியான நிலைமை ஏற்பட்டது. பெப்சுவில் நடந்த தேர்தல்களிலும், மன்னர்கள் நிலப்பிரபுக்கள் ஆகியவர்களில் பெரும்பான்மையோரின் ஆதரவைத் திரட்டியதின் மூலம், காங்கிரஸ் தனது செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டது.

ஆகவே, தேர்தலில் வெற்றிபெறுவதற்குக் கூட, எதிர்கட்சிகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுவதல்ல பிரதானம் என்பது தெளிவாகிறது. அத்தகைய ஒப்பந்தங்கள் ஏற்படவேண்டியது அவசியமும், பிரயோஜனமளிக்கக் கூடியதுதான். அத்தகைய ஒப்பந்தங்களை அடிக்கடி செய்யத்தான் வேண்டும். ஆனால், காங்கிரசை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்குரிய பிரதான ஆயுதமாக அந்த ஒப்பந்தங்கள் ஆகவே முடியாது. சம்பவங்கள் எந்த வழியைப் பின் பற்றி நிகழ்ந்தாலும் சரி, அதிகாரத்திற்கான போராட்டங்கள் கட்டத்துக்குக் கட்டம் எத்தகைய ரூபத்தை மேற்கொண்டாலும் சரி, பொதுஜனங்கள் செயல்படுவதிலே ஏற்படும் ஐக்கியமும், தொழிலாள வர்க்கத்தின் கீழும் அதன் கட்சியின் தலைமையின் கீழும் நடக்கின்ற ஒரு பொதுஜன புரட்சிகரமான இயக்கமாக இறுகப் பிணைந்து வளர்வதும்தான் பிரதான ஆயுதமாக எப்பொழுதும் இருக்கமுடியும். இந்த ஆயுதம்

ஒன்றுதான், காங்கிரசின் வெகுஜன அடிப்படையை தகர்த்தெறிந்து சக்திகளின் சேர்க்கையில் ஒரு மாற்றத்தை எற்படுத்தமுடியும். அது ஒன்றுதான், ஒரு சரியான அடிப்படையில் தேர்தல்ஒப்பந்தமானாலும் கூட செய்துகொள்வதை சாத்தியமாக்கும்; பயனுள்ளதாக்கும்.

நீண்டகாலமாக கட்சியினால் இந்த ஆயுதம் கையாளப்பட்டுவந்த இடங்களில் மட்டும்தான்—எங்கெங்கு வெகுஜனப்போராட்டங்கள் நடத்தப்பட்டனவோ, பொதுஜன ஸ்தாபனங்கள் கட்டப்பட்டனவோ அங்கெல்லாம்தான் நடந்த தேர்தல்களில் காங்கிரசை எதிர்த்து பிரம்மாண்டமான வெற்றிகளைப் பெற முடிந்திருக்கின்றன. பொது ஜனங்களின் உடனடியான நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்காக இன்று செயலிலே ஒற்றுமை நிறுவப்படுமானால்தான், இடதுசாரிக் கட்சிகள், சக்திகளின் ஐக்கியத்தால் காங்கிரசைத் தோற்கடிக்கமுடியும்.

ஒரு பிற்போக்கு அல்லது சீர்திருத்தவாத "எதிர்க்" கட்சி, காங்கிரஸ்-எதிர்ப்பு உணர்ச்சியை மிக தந்திரமாகப் பயன்படுத்திக்கொண்டு காங்கிரசை தோற்கடித்து செல்வாக்குப் பெறவும் சிலநேரம் முடியலாம். ஆனால், அப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாவது, ஒரு "முன்னேற்றப்படி"யுமல்ல; "குறைந்த தீமையும்" ஆகாது. ஏனென்றால் அத்தகைய ஒரு கட்சி, அது சோஷலிசத்தைப் பற்றி, பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி பறையடிப்பது போன்று கூறினாலும், அது ஆளும் வர்க்கங்களின் மற்றொரு கைக்கருவியாகத்தான், அவர்களது இரண்டாவது பாதுகாப்பு அணியாகத்தான் உபயோகிக்கப்படும். நிச்சயமாக, அத்தகைய ஒரு கட்சி அடைகின்ற வெற்றி, வெகுஜன இயக்கத்தை பின்னுக்குத் தள்ளிவிட ஏதுவாகும்; மக்களிடையே புதிய பிரமைகளைப் பரப்புவதற்கு ஏதுவாகும்; புதிய துரோகங்களைச் செய்வதற்கு ஏதுவாகும்.

ஆகவேதான், ஜனநாயக சக்திகளை எதிர்நோக்கியுள்ள கடமை, காங்கிரசைத் தனிமைப் படுத்தி, அதிகாரத்திலிருந்து அதை நீக்கி விடுவது மட்டுமல்ல. பிற்போக்குக் கட்சிகள் அல்லது சந்தர்ப்பவாத கட்சிகள்—ஆளும் வர்க்கங்களை இன்று பிரதிநிதித்துவப் படுத்தும் அக் கட்சிகள்—காங்கிரசின் இடத்தைப் பிடித்துக்கொண்டு வீற்றிருக்க முடியாத நிலைமையை சிருஷ்டிக்க உத்தரவாதமளிக்கவேண்டியதும் அவசியமாகும். ஒரு ஜனநாயக சர்க்காரை—தங்கள் நல்வாழ்விற்காகவும் உடனடியாகத் தேவைப்படும் சீர்திருத்தங்களுக்காகவும் தாங்கள் நடத்தும்—போராட்டத்தில், பொதுமக்களுக்கு ஆயுதமாக விளங்கும்படியான—ஒரு பலம் பொருந்திய பொதுஜன இபக்கத்தின் விளைவாக உருவாகும்படியான ஒரு புதிய வர்க்க உறவு—அந்த ஒரு புதிய வர்க்க உறவைப் பிரதிநிதித்வப்படுத்துகின்ற ஒரு ஜனநாயக சர்க்காரை—அமைப்பது நமது கடமையாகும்.

இந்திய அரசியலில் எழுந்துள்ள புதிய அம்சம்

இந்தக் குறிக்கோளை அடைவது பூரணமாக சாத்தியமாகும். இந்த சாத்தியப்பாடு ஏற்படுவது, நாட்டிலுள்ள யதார்த்த நிலைமைகளால் மட்டுமல்ல, பொதுமக்களிடையே வளர்ந்துவரும் விழிப்புணர்ச்சியும், தீவிரத்தன்மையால் மட்டுமல்ல; எல்லாவற்றிரும் மேலாக, நமது தேசிய அரசியலில் கம்யூனிஸ்ட் கட்சி வகித்துள்ள, வகித்துக் கொண்டுவரும் அந்தஸ்தாலும் ஆகும்.

1947க்குப் பிறகு, இந்தியாவில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான சம்பவம்—நமது மக்களின் பெரும் பகுதியினரின் ஆதரவை காங்கிரஸ் இழந்துவிட்டது என்பதாகும் என்று சில சமயம் வற்புறுத்திக் கூறப்படுகிறது. இந்தமாதிரி வற்புறுத்திக் கூறுவது சரியல்ல. நடந்துள்ள மிக முக்கியமான சம்பவங்கள்—இடதுசாரிப் பக்கம் மக்கள் சாய்ந்துள்ளது; எல்லாவற்றிற்கும் மேலாக—இன்று காங்கிரசுக்கு சவால் விடுக்கும் பிரதான சக்தியாக மற்றொரு முதலாளித்வக் கட்சியல்ல, தொழிலாளிவர்க்கத்தின் கட்சியான கம்யூனிஸ்டு கட்சி உருவாகியுள்ளதும்தான். இந்த நிலைமைதான், இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள புதிய அம்சமாகும். இந்த நிலைமைதான், ஜனநாயக இயக்கத்தை சரியான வழியில் நடத்திச் செல்ல இதற்குமுன் இல்லாத பெரும் வாய்ப்புக்களை சிருஷ்டித்துள்ளது.

அதே சமயத்தில், கம்யூனிஸ்டு கட்சி இன்று அடைந்துள்ள அந்தஸ்து, நிகரற்ற ஒரு அந்தஸ்தல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இன்னும், நாட்டில் பலம் பொருந்திய தனி ஒரு கட்சியாக, காங்கிரஸ் இருப்பதோடு மட்டுமல்லாமல், பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும், வகுப்புவாத பிற்போக்கு கட்சிகளும்கூட பல பிரதேசங்களில் கம்யூனிஸ்ட் கட்சியைவிட பலம்வாய்ந்தவையாகவும் இருக்கின்றன. மேலும், ஏற்கனவே விளக்கியுள்ளபடி, கம்யூனிஸ்டு கட்சித் தலைமையின்கீழ் உள்ள ஒரு இயக்கம்கூட, சீர்திருத்தவாத வெகுஜன இயக்கத்தின் அம்சங்கள் கொண்டதாக இருக்கலாம். ஆகவே, சரியான வழியில் பொதுமக்களை இட்டுச் செல்வதற்கான சாத்தியம் யதார்த்தமாக வேண்டுமானால்—இந்திய அரசியலில் உள்ள புதிய அம்சத்தின் முக்கியத்துவத்தை ஒரு கணமும் மறந்துவிடக்கூடாது; ஜனநாயக முன்னணிபற்றிய சந்தர்ப்பவாத, குலைக்கும் தன்மை கொண்ட போக்குகள் (concepts) கைவிடப்படவேண்டும்; கட்சியின் தனித்தன்மையை எப்பாடுபட்டாயினும் காப்பாற்றி, அதன் வெகுஜனத் தன்மையை தொடர்ந்து பலப்படுத்தவேண்டும் என்பதுவே மிகவும் முக்கியமானதாகும். இதற்கு, நமது சொந்த சரித்திரத்திலிருந்து சரியான பாடங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

பலதடவைகளில், இந்திய கம்யூனிஸ்டு கட்சியானது செய்துள்ள கடும் தவறுகளின் காரணமாக—நம்மால் தெளிவாக ஒப்புக்கொள்ளப்

பட்டுள்ள தவறுகளின் காரணமாக—பலர், கட்சியின் நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் உள்ளிட்ட பலர், அதன் சாதனைகளைக் குறைத்துப் பேசும்படியான ஒருபோக்கு வளர்ந்துள்ளது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சரித்திரமே, திரிபுகள் நிறைந்த சரித்திரம்தான் என்றும் கட்சி சாதித்துள்ள சாதனை மிகச்சொற்பம்தான் என்றும் கட்சிக்குக் கிடைத்திருக்கின்ற இன்றைய அந்தஸ்துக்கும் காரணம் அநேகமாக சோவியத் நாட்டின் சாதனைகள், சீனமக்கள் ஜனநாயகப் புரட்சியின் வெற்றி ஆகியவைதான் என்று இவர்கள் அடிக்கடி பேசுகிறார்கள். இத்தகைய ஒரு அபிப்பிராயம் சில சமயம் பகிரங்கமாகச் சொல்லப்படுகிறது: "சர்வ தேசியத்திற்கு" ஒரு உதாரணம் என்று பறைசாற்றப்படுகிறது. ஆனால் உண்மை இதற்கு முழுதும் வேறுபட்டதாகும்.

ஒரு புதிய சமுதாயம் நிர்மாணிக்கப்பட்டு வரும் சோவியத் யூனியனின் கீர்த்திமிக்க உதாரணமும், சீனப் புரட்சியின் மகத்தான முன்னேற்றமும், சகல நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு விலைமதிக்க முடியாத சம்பத்துகள் என்பதிலும், மக்களுக்கு போதமூட்டுவதற்கான வன்மை மிக்க ஆயுதமென்பதிலும் எள்ளவும் சந்தேகம் இருக்க முடியாது. உலகப் புரட்சிகரமான முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் அவை; நமது நாட்டிலும் பொதுமக்களின் தீவிரத் தன்மையைப் பெருக்குவதற்குப் பெரிதும் துணை புரிந்தவை அவை. அதே சமயத்தில், ஒவ்வொரு நாட்டிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சி அடைந்துள்ள அந்தஸ்து—இறுதியாக பரிசீலித்துப் பார்த்தால்—அதனுடைய சொந்தப் பணியைப் பொறுத்தும், அதன் பிரச்சாரம் கிளர்ச்சியின் பயனுள்ள தன்மையைப் பொறுத்தும், அதன் சொந்த மக்களின் உணர்வை உயர்த்துவதற்கு, தேசீய, சர்வதேசீய சம்பவங்களை (சோவியத் நாடு, சீனா ஆகியவற்றின் சாதனைகளை உள்ளிட்டு) அது உபயோகப்படுத்துகின்ற தன்மையைப் பொறுத்தும் உள்ளது என்று சரித்திரம் நமக்குப் போதிக்கிறது. அதன் கோஷங்கள், போர்த்தந்திரங்கள் சரியானவைதானா என்பது பற்றியும், சுரண்டப்படும் மக்களின் நலன்களுக்காக அது எப்படி சேவை செய்கிறது என்பது பற்றியும், ஒவ்வொரு பகுதியிலுமுள்ள அவர்களின் போராட்டங்களுக்குத் தலைமை தாங்குவது பற்றியும் சரித்திரம் நமக்குப் போதிக்கிறது. இந்தியாவிற்கும் இது பொருந்தும். அப்படிக்கில்லாமல், சர்வதேச அரங்கில் நிகழ்ந்த சம்பவங்களே நமது வளர்ச்சிக்கு ஒரே அல்லது பிரதான காரணமாகவேனும் இருந்திருக்குமானால், நமது நாட்டின் கம்யூனிஸ்ட் இயக்க வளர்ச்சியில் காணப்படும் இன்றைய அசமத்துவ வளர்ச்சி இருந்திருக்க முடியாது; கடந்த பொதுத் தேர்தல்களிலும், அதற்குப்பின் நிகழ்ந்த சம்பவங்களிலும் எற்பட்ட விளைவுகளில் தெட்டத் தெளிவாக்க காணப்பட்ட எற்றத் தாழ்வுகள் இவ்வளவு இருந்திருக்க முடியாது.

ஆகவே, நமது நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்து முன்னேறுவதற்கு "வெளி அம்சங்கள்" போக, வேறு சில அம்சங்கள் காரணமாயிருந்திருக்க வேண்டும் என்பது நன்கு புலப்படுகிறது.

நாட்டிலுள்ள இதர எல்லா சக்திகளும், இன்று தங்களை மார்க்ஸிஸ்ட் கட்சிகள் என்று சொல்லிக்கொள்ள விரும்பும் இடதுசாரி கட்சிகள் உள்பட, "தேசிய இயக்கத்தை—இந்திய மக்களுக்கும், பிரிட்டிஷ் எஜமானர்களுக்கும் இடையே நடக்கும்படியான ஒரு போராட்டம், என்றுமட்டும் கருதிய காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான், சுதந்திரத்திற்காக நாம் நடத்துகின்ற இயக்கம்—முதலாளித்வ ஆதிக்கத்தை எதிர்த்தும், சோஷலிசத்திற்காகவும், சகல விதமான சுரண்டலையும் ஒழிப்பதற்காகவும் உலகத் தொழிலாள வர்க்கம் நடத்துகின்ற சர்வதேசரீதியான போராட்டத்தோடு இணைந்த ஒரு பகுதி என்று எடுத்துக் காட்டியது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. குட்டி-பூர்ஷுவா இடதுசாரிக் கட்சிகளும், குழுக்களும் காங்கிரஸ் தலைமையைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றி நிற்பதும், அல்லது போதிய அளவு தைரியமாகவும் தீவிரமாகவும் எதிர்க்கத் துணியாமல், வார்த்தையளவில் குறைகூறி நிற்பதுமாயிருந்த சமயத்தில், இந்தத் தலைமையின் வர்க்கத் தன்மையை அம்பலப்படுத்த முனைந்ததும், அதன் துரோகப் பாத்திரத்தை எதிர்த்து எச்சரிக்கை விடுத்ததும், தொழிலாள வர்க்கத் தலைமையின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்தியதும் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான். பரிபூரண சுயராஜ்யம் என்பதன் தன்மையையும், உள்ளடக்கத்தையும் பற்றி, இடதுசாரிகள் என்று தங்களை தம்பட்ட மடித்துக்கொண்டு நின்றவர்கள்கூட, பள்ளிப் பிள்ளை விவாதங்களை நடத்திக்கொண்டு காலங்கழித்துக் கொண்டிருந்தபொழுது, பொதுமக்களின் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக நடத்தப்படும் போராட்டங்களை, ஜனநாயக இயக்கத்தின் ஒரு பகுதியாக நடத்தி, பொதுஜன வர்க்க ஸ்தாபனங்களைக் கட்டுவதன் அவசியத்தை வற்புறுத்திவந்தது கம்யூனிஸ்டு கட்சி. பலவிதமான கஷ்ட நஷ்டங்களுக்கிடையேயும், பலவிதமான பெருந்தவறுகளை அது செய்ததற்கிடையிலும், இந்தக் கோட்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவர, கம்யூனிஸ்டு கட்சி முனைந்தது. இன்று, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்திருக்கிறதென்றால், இந்த அம்சங்களின் அடிப்படையில் அது செய்த உருப்படியான வேலையாலும், செயல்படுகின்ற பொதுமக்களின் தலைவனாக அது இயங்கியதாலும்தான் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

அதே சமயத்தில்—தேசிய இயக்கத்தின் தலைமைகளிலிருந்து பூர்ஷுவாக்களைக் கீழே இறக்கி, தொழிலாள வர்க்கத் தலைமையை நிலைநாட்டுகின்ற—மிக முக்கியமான கடமையை நிறைவேற்றுவதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிபெறவில்லை என்பதை நாம் ஒப்புக்

கொள்ளத்தான் வேண்டும். இந்தக் கடமையைத்தான், இன்று மிகத் துரிதமாக நாம் நிறைவேற்றியாக வேண்டும். இதைச் சாதிப்பதற்கு, முன்னைவிட இப்பொழுது கட்சிக்கு அதிக சாத்தியப்பாடுகள் இருக்கின்றன.

உறுதியான, இடைவிடாத நடவடிக்கை தேவை

ஏற்கெனவே விளக்கியுள்ளதுபோல, இதைச் சாதிப்பதற்கு, தொழிலாள வர்க்கமும், பாடுபடும் விவசாயிகளுமான அடிப்படையான பொதுஜனப் பகுதிகளை பிரதான பலமாகக்கொண்ட ஒரு பொதுஜனப் புரட்சிகரமான இயக்கத்தைக் கட்டி வளர்க்கவேண்டியது அவசியமாகின்றது.

அத்தகைய ஒரு இயக்கத்தை, பொதுஜன நடவடிக்கையின் அடிப்படையில்தான் கட்டி வளர்க்க முடியும், இதைச் செய்யாமல், புரட்சியை முன்னுக்குக்கொண்டு செல்வது என்பதும், தொழிலாள வர்க்கத் தலைமையை நிலைநாட்டுவது என்பதும், ஜனநாயக முன்னணியைக் கட்டுவது என்பதும் கவைக்குதவாத பேச்சாக முடியும். வர்க்கங்கள், கட்சிகள், குழுக்கள்; தனி நபர்கள் ஆகியவர்களைக்கொண்ட அந்த ஐக்கிய முன்னணி—பொதுஜன நடவடிக்கைகளின் போது—உடனடிக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களின்போதும் இதர நடவடிக்கைகளிலும்—வளர்ந்து, நன்றாக உருவாகி, உறுதிபெறும் இத்தகைய ஒரு ஐக்கிய முன்னணிதான், போராடும் ஜனநாயக முன்னணியாக வளர்ந்தோங்கி, இன்றைய சர்க்காரை அகற்றி, ஜனநாயக ஐக்கிய சர்க்காரை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டதாக இருக்கும்.

நமது பழைய வேலை முறையானது, போதாது என்பதைக் கடந்த இரண்டு ஆண்டு சம்பவங்கள் நன்கு நிரூபித்துக் காட்டிவிட்டன. (1) பத்திரிகை, பொது மேடை, சட்டசபை மூலமாகச் செய்த பொதுப்படையான அரசியல் கிளர்ச்சி; (2) அவ்வப்பொழுது பொதுஜன இயக்கம் நடத்துவது; அப்போது மட்டும் கட்சி முழுவதும் இயங்குவது; (3) பகுதி (அன்றாடப் பிரச்சினைகளுக்கான) போராட்டங்கள் வெடிக்கும்பொழுது, அவற்றிற்குத் தலைமை தாங்குவது அல்லது அவற்றில் கலந்துகொள்வது ஆகியவைதான் நமது பழைய வேலை முறைகள். இந்த வேலை முறைகள் போதாது. இந்த அடிப்படையில், பொதுஜன இயக்கத்தைப் புதுப்பித்து, பலப்படுத்துவது என்பது குறுகிய எல்லைக்கோட்டுக்குள் நின்று செயல் புரிவதாகும். இந்தக் குறுகிய வட்டத்திற்குள் நின்றுசெய்யப்படும் வேலை, பல மாகாணங்களில் நிறைவேற்றப்பட்டுவிட்டன அல்லது முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, மக்களின் உடனடிக் கோரிக்கைகளுக்கான எண்ணற்ற போராட்டங்கள், நாட்டின் எல்லா பாகங்களிலும் நடைபெற்றுள்ளன. இந்தப் போராட்டங்களில் பல, ஒன்றுபட்டு நின்று நடத்தப்பட்டுள்ளன. அவற்றில் பல பகுதி வெற்றிகளையும் அடைந்துள்ளன. உண்மையில், 1948க்குப்பிறகு இம்மாதிரி பல போராட்டங்கள் நடந்ததேயில்லை; இத்தனை பல வெற்றிகளையும் அடைந்ததில்லை. அதற்கான காரணங்கள், கட்சியின் மூன்றாவது காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள அரசியல் தீர்மானத்தில் விளக்கப்பட்டுள்ளதால், அதை மேலும் விவரிக்கவேண்டிய அவசியமில்லை.

இதைப்போன்ற இன்னும் பல போராட்டங்கள், இனியும் வெடிக்கும்; அவை, மக்களின் நம்பிக்கையை மேலும் உயர்த்தி, அவர்களின் செயல்படும் ஒற்றுமையை கட்டும்படியான மாபெரும் சந்தர்ப்பங்களை உண்டாக்கும். இதற்கு சமீப உதாரணமாக—மேற்கு வங்க ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தைக் கூறலாம்; மேற்கு வங்கத்திலுள்ள சகல கட்சிகள், குழுக்களின் ஆதரவைப்பெற்ற அந்த ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் ஒரு ஒன்றுபட்ட பொதுஜன இயக்கமாக வளர்ந்து, சர்க்காரிடமிருந்து முக்கியமான சலுகைகளைப் பெற முடிந்தது.

பொருளாதாரப் போராட்டங்களின் முக்கியத்வம்

உடனடிக் கோரிக்கைகளுக்காக நடத்தப்படும் இத்தகைய போராட்டங்களின் முக்கியத்துவத்தையும், பலனையும் குறைத்து மதிப்பிடும் போக்கு மிகவும் அபாயகரமானது. இத்தகைய ஒரு போக்கு நமது கட்சியில் சந்தேகத்திற்கிடமின்றி காணப்படுகிறது; இதை அடியோடு எதிர்த்தாகவேண்டும். உடனடிக் கோரிக்கைகளுக்கான போராட்டத்தை முக்கியப்படுத்துவதும் "பொருளாதார வாதம்" என்ற ரகத்தைச் சேர்ந்தது என்று நினைக்கும் தோழர்களும் இருக்கின்றார்கள். இந்தப் போக்கு—சமீப வருடங்களில் கட்சி வேலைசெய்யத் தொடங்கியுள்ள புதிய பிரதேசங்களிலும், தொழிலாளவர்க்க இயக்கம் பலமடையாத அல்லது அறவே இல்லாத பிரதேசங்களிலும், அன்றாடக் கோரிக்கைகளுக்காக விட்டுக்கொடுக்காது போராடுகின்ற வர்க்கப் போராட்ட பாரம்பரையை இனிமேல் சிருஷ்டிக்கவேண்டிய பிரதேசங்களிலும் குறிப்பாக துலக்கமாகத் தென்படுகின்றது.

1905ம் ஆண்டு புரட்சியைப்பற்றி லெனின் கூறியுள்ள வாசகத்தின் முக்கியத்துவத்தை பல தோழர்கள் புரிந்துகொள்ளவில்லையென்பது நன்கு புலனாகின்றது:

"சுரண்டப்படுகின்ற விரிந்த ஜனப்பகுதி மக்கள்—பல தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகள் எப்படி முதலாளிகளை

கிர்ப்பந்தப்படுத்தி, தங்களது வாழ்க்கை நிலைமைகளை உடனடியாக அபிவிருத்தி செய்துகொள்வதற்கு வழி வகுத்துக்கொண்டார்கள் என்பதைப் பார்க்காதிருந்தால், புரட்சிகரமான இயக்கத்தில் ஆகர்ஷிக்கப்பட்டிருக்கமாட்டார்கள்."

மேலும், "......பொருளாதார போராட்டம்தான், அவர்களது வாழ்க்கை நிலைமைகளை உடனடியாக, நேரடியாக உயர்த்துகின்ற போராட்டம்தான், சுரண்டப்படும் மக்களில் மிகவும் பிற்பட்டுக் கிடக்கும் பகுதியினரை எழுச்சிபெறச் செய்யமுடியும்; அவர்களுக்கு உண்மையான போதத்தை ஊட்டி, அவர்களை—ஒரு புதிய புரட்சிகரமான சகாப்தத்தில்—ஒருசில மாதங்களுக்குள் அரசியல் போராட்ட வீரர்களின் படையாக ஆக்கிவிட முடியும்."

இந்த சந்தர்ப்பத்தில் மனதிலே பதித்துக்கொள்ள வேண்டிய ஒரு உண்மை என்னவென்றால்—விவசாய மக்கள்மீதுள்ள துன்பச் சுமை பெருகி, அவர்களது வாழ்க்கை நிலைமை பாதாளத்தை நோக்கி சரிந்துகொண்டு வந்தும்—விவசாய இயக்கமானது; இன்னும் பல பகுதிகளில் மிகமிகக் குறைந்த மட்டத்தில் இருந்து வருவதும்; விவசாய மக்களின் பொதுஜன நடவடிக்கைகள் மிக விரிந்த அளவுக்கு இனிமேல்தான் நடைபெற விருக்கிறதும் என்பதாகும். இதற்குரிய ஒரு முக்கியமான காரணம், இயக்கத்தைப்பற்றி பல முக்கியமான பிரச்சினைகளில் நமது கட்சிக்குள்ளும், விவசாயத் தலைவர்களுக்கிடையிலும் ஒரு ஒருமித்த கண்ணோட்டம் ஏற்படாததேயாகும். இந்தக் குறை பெரிய அளவுக்கு, மத்தியக் கமிட்டியின் சென்ற கூட்டத்தில் (1954 ஏப்ரல்) எடுக்கப்பட்ட முடிவுகள் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது; விவசாய இயக்கத்திற்கான உடனடியான கோஷங்களையும், போர்த்தந்திரங்களையும் அந்த முடிவுகள் விளக்குகின்றன.

ஆகவே, விவசாயப் போராட்டங்களை ஒழுங்கு செய்து வளர்த்துச் செல்வது, கட்சிக்கு முன்புள்ள ஒரு முக்கியமான கடமையாகும். அதே சமயத்தில், பொதுஜன இயக்கத்தில் காணப்படும் பலவீனத்தைச் சமாளித்து முன்னேறுவதற்கு இது மட்டும் போதாதென்பதையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். ஏனெனில், கிராமப் புறங்களில் இன்று நிலவிவரும் வேலைமுறையின் தொடர்ச்சியாக மட்டும் புதிய கிராம பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லும் நிலைமை ஏற்படலாம். இது நிச்சயமாக, இன்றுள்ள எழுச்சியின் அடிப்படை நிலைமையை மாற்றிவிடவும் செய்யாது; வளர்ந்து, பரவி, விரிந்து படிப்படியாக உச்சக்கட்டத்தை நோக்கி முன்னேறிச் சென்று தனது தாக்கும் சக்தியை மேலும்மேலும் பெருக்கிக்கொள்ளும் ஒரு பொதுஜன இயக்கத்தைக் கட்டிவளர்க்கவும் நமக்கு உதவி செய்யாது.

அதாவது, தொழிலாளர்கள், விவசாயிகள், இன்னும் இதர வர்க்கங்கள், ஜனப் பகுதிகள் ஆகியோரின் உடனடிக் கோரிக்கைகளுக்

கான போராட்டங்கள்தான், கட்சியின் மிக முக்கியமான கடமையாக இருந்து வருகின்றன. ஆனால் அதுமட்டும் போதாது. இந்தப் போராட்டங்களையே—பொருளாதார, அரசியல், சித்தாந்த அம்சங் கொண்ட வர்க்கப் போராட்டத்தின் மூன்று முனைகளிலும், திட்டமிடப்பட்ட, முறையான, இடைவிடா உறுதியான பொதுஜன நடவடிக்கையின் அங்கமாக நடத்தவேண்டும். இரண்டாவதாக, இத்தகைய நடவடிக்கையை மிகுந்த பலன் தரத்தக்கதாக நடத்துமுறையில் கட்சியையே அமைத்தாகவேண்டும்; அப்போதுதான் குறுகிய காலத்திற்குள் ஆயிரக் கணக்கான ஊழியர்கள் பயிற்சி பெறுவார்கள்.

நடவடிக்கைக்கு இடையே ஸ்தம்பிப்பு

அத்தகைய இடைவிடா உறுதியான பொதுஜன நடவடிக்கை சமாளிக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட பலவீனங்கள்தான் என்ன?

இன்றுள்ள நிலைமையில் காணப்படும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால்—பெரிய போராட்டங்கள், நடந்துகொண்டு வந்தும், நடந்துகொண்டிருந்தும், நாட்டின் சகல பாகங்களிலும், ஒரே விதமான பழைய வேலைமுறைதான் ஓரளவுக்கு நடந்து வருவதாகத் தென்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, நாட்டின் பல பாகங்களிலும் பெரிய போராட்டங்களும், இயக்கங்களும் நடந்து வந்தன. அதில் பலவற்றில் லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு, வெற்றியும் பெற்றார்கள். ஆயினும், ஒவ்வொரு போராட்டம் முடிந்த பிறகும், போராட்டங்களும், இயக்கங்களும் வெற்றிகண்ட பிறகும், கட்சியின் ஸ்தாபன ரீதியான பலமும், பொதுஜன ஸ்தாபனங்களின் பலமும், அதன்மூலம் ஏற்படுகிற ஜனநாயக முன்னணியின் பயன் தரத்தக்க பலமும், எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்று கணக்குப் பார்த்தால்—கட்சி அங்கத்தினர்கள் தொகை என்ன, புதிய கட்சி யூனிட்டுகள் எவ்வளவு, நமது பத்திரிகைகளின் பிரதிகள் எத்தனை, நமது கட்சிப் பிரசுரங்களின் விற்பனை எவ்வளவு, கட்சி நிதி வசூல் ஸ்திரப்படுத்தப்பட்டு அதிகரிக்கப்பட்டு, புதிய தொடர்புகள், அனுதாபிகள் பெற முடிகிறதா, பொதுஜன ஸ்தாபனங்களின் அங்கத்தினர் தொகை பெருகுகிறதா, அடிப்படையான யூனிட்டுகளின் எண்ணிக்கை அதிகமாகிறதா, கட்சியல்லாத முற்போக்கு சக்திகள், பொதுஜன ஸ்தாபனங்களில் தீவிரப்பங்கு கொள்ளுகின்றனரா, கட்சி அனுதாபிகள், கட்சி அங்கத்தினர்களாவது செயல்படுகிறார்களா—என்பதைக் கணக்குப் பார்க்கும்பொழுது, இயக்க வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் போதிய முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்று சொல்வதற்கில்லை.

ஆனால், கட்சியையும், பொதுஜன ஸ்தாபனங்களையும், ஜனநாயக முன்னணியையும் பலப்படுத்தாமல், பொதுஜன இயக்கத்தை ஒரு கட்டத்துக்கு மேலே கொண்டு செல்வதென்பது முடியாது. பல

மாகாணங்களில் இந்தக் கட்டம் சீக்கிரமே ஏற்பட்டுவிட்டது; பொது ஜனங்கள் இயங்க ஆரம்பித்த பிரதேசங்கள், போராட்டங்களில் திரண்ட மக்கள், அங்கு கையாளப்பட்ட போராட்ட முறைகள் ஆகியவற்றைப் பார்க்கும்போது, அப்பிரதேசங்களில் நடந்த ஒவ்வொரு போராட்டமும் முன்னர் நடந்த போராட்டங்களைப் போலவே தென்பட்டது என்பது மிக நன்றாகத் தெரிந்தது. ஆகவே, அந்த மாகாணங்களில், தீவிரமான நடவடிக்கைகளுக்கு இடையே ஒரு புதுவிதமான ஸ்தம்பிப்பு நிலைமை ஏற்படலாயிற்று. வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற பல போராட்டங்கள் நடத்தப்பட்டன; கட்சி யூனிட்டும், பல தோழர்களும் செயல்பட முனைந்தார்கள்; ஆயினும் இயக்கம் முழுவதும், மிகத் தீவிரமாக முன்னேற வேண்டிய அளவுக்குச் செல்லவில்லை.

இத்தகைய ஒரு நிலைமை ஏற்படும்பொழுது, தவிர்க்கமுடியாதபடி இரண்டு போக்குகள் எழுகின்றன. ஒன்று-திருப்தி மனப்பான்மையும் அலட்சியமும் நிறைந்த போக்கு; சீர்திருத்த சேற்றுக்கு கட்சியை இழுத்துச் செல்லும் போக்கு. மற்றொன்று—பொறுமையின்மை, சோர்வும் நிறைந்த போக்கு; ஸ்தம்பிப்பை உடைத்து, இயக்கத்தை உயர்ந்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் ஒரே மார்க்கமான தீவிர போராட்ட ரூபங்களைக் கையாளச் சொல்லுகின்ற போக்கு.

இந்த இரண்டு போக்குகளும் சில பிரதேசங்களில் ஏற்கனவே தென்பட ஆரம்பித்துவிட்டன. அவற்றை நாம் உடைத்தெறிந்தாக வேண்டும்.

இதற்கு, உணர்வையும், ஸ்தாபனத்தையும்—இன்றைய நிலையில் மிகவும் தீர்க்கமான அரசியல் அம்சங்களாகிவிட்டவை இவை—கெட்டிப்படுத்தாமல், ஸ்தம்பிப்பை உடைத்தெறிய முடியாது என்பதை எல்லாவற்றிற்குமேலாக நன்கு புரிந்து கொள்ளவேண்டும். அலட்சியப் போக்கு கட்சியை அரித்து, அதன் உறுதியையே குலைத்துவிடும். குறுக்கு வழியைக் கண்டு பிடிக்கக் கையாளும் முயற்சிகள், வீரச்செயல் வாதத்திற்குக் கொண்டுசெல்லும்.

ஆகவே, பொதுமக்களின் உணர்ச்சித் தரத்தை உயர்த்தி, அவர்களது ஸ்தாபனங்களை பலப்படுத்துவதன் மூலம்தான், இயக்கத்தை முன்னுக்குக் கொண்டுசெல்லமுடியும். இதுதான், இடைவிடா உறுதியான பொதுஜன நடவடிக்கை சாதிக்கவேண்டிய குறிப்பான சாதனையாகும்.

இப்பொழுது தேவைப்படும் வேலைமுறை

முறையான, இடைவிடாத உறுதியான பொதுஜன நடவடிக்கை என்பது என்ன? இன்று செய்யப்பட்டு வருவதற்கும் இதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

இத்தகைய நடவடிக்கைகளாவன :

1. சர்வதேசிய, தேசியப் பிரச்சினைகளைப்பற்றி பொதுஜனங்களுக்கு சரியான போதனை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு கட்சி கொள்கை, கட்சியின் கோஷங்களைப் பற்றி அவர்களுக்குள்ள சந்தேகங்களை நீக்க, அவ்வப்பொழுது தோன்றும் விமர்சனங்களுக்குப் பதில் சொல்ல அவர்கள் மத்தியில் கிளர்ச்சி பிரசாரம் செய்யப்படவேண்டும்; அப்பொழுதுதான், காங்கிரசுக்கு எதிராக மட்டும் கிளம்பாமல், நமது கட்சியையும், அதன் கொள்கையையும் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு மக்களைத் திரட்ட முடியும். ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள ஸ்தூலமான பிரச்சினைகளில் கவனத்தைத் திருப்பும்படியான அளவுக்குக் கிளர்ச்சி செய்தால்தான், அந்தப் பிரச்சினைகளில், பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டி அவர்களை வெகுஜன நடவடிக்கைகளில் ஈடுபடும்படி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு பிரசாரம் நடத்தப்பட வேண்டும்.

நமது கிளர்ச்சியில் (பேச்சுக்களோ, எழுத்துக்களோ) இன்று காணப்படும் குறிப்பிடத்தக்க அம்சம்—மிக மிகப் பொதுப்படையான கதம்பத்தன்மை கொண்டதாக இருப்பதாகும். நம்முடைய பிரசங்கிகள் முன்கூட்டியே தங்களது பேச்சுக்களை தயார் செய்வதில்லை. சர்க்காரை அம்பலப்படுத்தும் விஷயங்களிலும் அவர்கள் பேச்சு போதிய அளவு ஸ்தூலமாக இருப்பதில்லை; ஒவ்வொரு பிரதேசத்திலும் மக்களைப் பாதிக்கும் குறிப்பிட்ட பிரச்சனைகளைப் பற்றி, பொதுமக்களைத் திரட்டுவது எந்த பிரச்னைகளில் சாத்தியமோ அந்த பிரச்னைகள்பற்றி போதுமான அளவு ஸ்தூலமாக இருப்பதில்லை.

இரண்டாவது அம்சம்—நமது கிளர்ச்சியில் காணப்படுவது, சொன்னதையே திருப்பிச் சொல்லுதல், கோஷங்களையே கூறிக்கொண்டிருப்பது ஆகியவைவாகும். பொதுவாக இது மக்களுக்குப் போதத்தை ஊட்டாது; அவர்கள் எற்கனவே தெரியாத ஒன்றைத் தெரியவைக்காது.

நமது கிளர்ச்சியின் மூன்றாவது அம்சம்—கட்சி, அதன் கொள்கைகளைப்பற்றியும், சர்க்கார், அதன் நடவடிக்கைகள் பற்றியும் மக்கள் மனதிலே எழுகின்ற கேள்விகளுக்கு, அவர்களுக்கு விளக்க புரியும் முறையில் பதில்கள் அளிப்பதில்லை. சர்க்காரை கடுமையாகத் தாக்கிப் பேசுவதாலல்ல, ஜனங்கள் புரிந்து கொள்ளும் முறையில் ஸ்தூலமாக அம்பலப்படுத்துவது மூலம் (விமர்சனம் என்பது கடுமையாகத் தாக்கிப் பேசுவது என்பதல்ல), நமது கொள்கைகள் எவ்வளவு சரியானவை என்று மக்கள் மனதில் பதில்வைப்பதன் மூலம் தான் மக்களை நம் பக்கம் இழுக்கமுடியும் என்பதை நாம் மறந்து விடுகின்றோம். காங்கிரசையோ அல்லது இதர கட்சிகளையோ பின்பற்றிவந்த அரசியல்-உணர்வு பெற்றுள்ள பெரும்பகுதி மக்களிடம்,

இன்று அந்தக் கட்சிகளைப்பற்றி விமர்சிக்க ஆரம்பித்திருப்பவர்களிடம் கையாள வேண்டியமுறை மேலே குறிப்பிடப்பட்டதாகும்.

நாலாவது அம்சம்—நமது கிளர்ச்சியெல்லாம் பத்திரிகைகள், மேடைப் பிரசங்கங்கள், சட்டசபை ஆகியவற்றின் மூலமாக மட்டுமே நடைபெறுகின்றன. கம்யூனிஸ்ட் இன்ட்டர் நாஷனல் மூன்றாவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட ஸ்தாபனம்பற்றிய அறிவுரையில்—கிளர்ச்சி பிரச்சாரம் என்ற பகுதியில்—"பிரச்சார ரூபங்கள்" என்ற பிரச்சினையைப்பற்றி விளக்கும்போது, "தனியாக நடத்தும் சம்பாஷணை பிரச்சாரத்"துக்கு முதல் இடம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்தப்பணி, "கிளர்ச்சியும், பிரச்சாரமும் செய்வதையே தங்கள் முழுநேர வேலையாகக் கொண்ட தோழர்களின்" வேலைமட்டுமல்ல; இதர சகல கட்சி அங்கத்தினர்களின் பணியுமாகும் என அதில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. பொதுகூட்டங்களில் தலைவர்கள் மட்டும்தான் கிளர்ச்சிப் பிரச்சாரம் செய்வது, அத்தகைய கூட்டங்களை ஏற்பாடு செய்வதோடு மட்டும் கட்சி அணிகள் இருந்து விடுவது என்பது ஒரு பூர்ஷ்வா மனோபாவமாகும்.

2. மக்களின் உடனடியான கோரிக்கைகளுக்காக பொதுஜன நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வது; இத்தகைய நடவடிக்கைகளை, ஒரு பொதுஜன சம்மதமான ஜனநாயக அம்சம் கொண்டதாக விளங்கும்படி நடத்துவதற்குரிய தயாரிப்புக்களைச் செய்யவேண்டும்.

3. பல்வேறு ரூபங்கள் கொண்ட நடவடிக்கைகளை—கலாச்சார சம்மந்தமானது, கல்வி சம்பந்தமானது, நிவாரணம், விளையாட்டுப் பந்தயங்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்வதன்மூலம் கட்சியும், பொதுஜன ஸ்தாபனங்களும் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள முடியும்.

4. சட்டசபைகள், ஜில்லா போர்டுகள், நகர சபைகள் ஆகியவற்றை, காங்கிரசை அம்பலப்படுத்துவதற்காக மட்டுமல்லாமல்; மக்களுக்கு சேவை செய்வதற்காகவும், அவர்களுக்கு சலுகைகளும், நிவாரணமும் பெற்றுத் தருவதற்காகவும் உபயோகப்படுத்தவேண்டும். சட்டசபைகளில் கம்யூனிஸ்ட்கள் செய்துள்ள வேலையை விளக்கி அடிக்கடி பிரசுரங்கள் வெளியிடுவது.

5. கட்சிப் பத்திரிகைகளை—பொதுமக்களுக்குக் கல்வி போதிக்கவும், அவர்கள் சந்தேகங்களுக்குப் பதில் கூறவும், வேலையை முறைப்படுத்தி முன்னே கொண்டு செல்லவும் ஏதுவாக நடத்துதல், ஒவ்வொரு பிரதேசத்திலும் வாசகர்கள் குழுக்களை ஏற்படுத்தி, விமர்சனங்கள், குறிப்புகள், யோசனைகளை அனுப்பும்படி செய்தல், நிருபர்களை செய்திகள் அனுப்பும்படி ஏற்பாடு செய்வது. எல்லாப் பகுதிகளிலும்

கட்சி யூனிட்டுகளைக் கொண்டு, பத்திரிகைகளை விற்கும் குழுக்களை ஏற்பாடு செய்வது. பத்திரிகைகளுக்கு நிதி வசூலித்தல், சந்தாதார்கள் சேர்த்தல் ஆகியவற்றிற்காக வீடு வீடாகச் செல்லுதல்.

6. கட்சிப் பிரசுரங்களை விற்பனை செய்வதை, ஒரு மிக முக்கியமான அரசியல் கடமையாக, சகல கட்சி யூனிட்டுகளும் மேற்கொள்ளுதல்.

7. கடைசியாக, எல்லாவற்றிற்கும் மேலாக, சகல நடவடிக்கைகளையும் செலுத்துகின்ற மையமாக—கட்சியையும், பொதுஜன ஸ்தாபனங்களையும், குறிப்பாக தொழிற்சங்கங்களையும், விவசாய சங்கங்களையும் கட்டி எழுப்புதல் ; தொழிற்சாலைகள், வீதிகள், கிராமங்கள் ஆகியவற்றில் அடிப்படை யூனிட்டுகளை அமைப்பதை விசேஷக் கடமையாகக் கொள்ள வேண்டும். தொழிற்சங்க, விவசாய சங்க போதனைப் பள்ளிகளை நடத்தி, குறிப்பாக, அவற்றின்கீழ் யூனிட்டுகளில் இயங்கும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். பொதுஜன ஸ்தாபனங்களில் வேலை செய்வதன் முக்கியத்துவத்தை, பல தோழர்கள் இன்னும் குறைத்து மதிப்பிட்டு வருகிறார்கள். கட்சி சட்டதிட்டத்தில் ஒரு கட்சி அங்கத்தினர்—விதி விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலொழிய—ஒரு பொதுஜன ஸ்தாபனத்தில் அங்கம் வகித்தாக வேண்டும் என்று தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தும், கட்சி அங்கத்தினர்களில் பெரும்பாலோர் எந்தவிதமான ஒரு பொதுஜன ஸ்தாபனத்திலும் தொடர்பு வைக்காமல் இருந்து வருவதிலிருந்து மேலே கூறியது விளங்கும்; அத்தகைய கட்சி அங்கத்தினர்கள், "பொதுவான அரசியல் வேலை" செய்வார்கள் அல்லது ஏட்டளவில் இருக்கும் "அரங்கங்களில்" வேலை செய்வார்கள்.

இத்தகைய இடைவிடாத உறுதியான பல்முனை பொதுஜன நடவடிக்கையை ஏற்பாடு செய்வதன் மூலமாகத்தான், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள், மாதர்கள் ஸ்தாபனங்களைக் கட்டி அமைக்கும்பொழுதுதான், இன்று தோன்றியுள்ள எழுச்சியை ஒன்றுதிரட்டி, மேலும் முன்னேறுவதற்கான அடிப்படையை அமைக்க முடியும். இவ்விதமாகத்தான், செயல் முறையில் தொழிலாளவர்க்க ஒற்றுமையை உருவாக்க முடியும்; உறுதி வாய்ந்த ஸ்தாபனரீதியான ஒற்றுமையை ஏற்படுத்தும்படியான ஸ்திரமான நடவடிக்கைகளை எடுக்க முடியும். இவ்விதமாகத்தான், கட்சி, தன்னுடைய பலத்தை மதிப்பிட முடியும்; எவ்வளவு பெரிய பகுதி உறுதியான ஆதரவளிக்கும் என்பதை சரியாக அறிந்து, பல்வேறு சக்திகளின் பலாபலத்தை சரியாகக் கணக்கிடுவதன் அடிப்படையில் தனது வேலையைத் திட்டமிட முடியும். இத்தகைய பொதுஜன வேலையை மேற்கொள்ளுவதன் மூலம்தான், கட்சி முழுவதையும் இயங்கவைக்க முடியும்; தோழர்களின் யதார்த்தமான ஆற்றலை

கணிக்கமுடியும்; ஒவ்வொரு தோழருக்கும் பொருத்தமான வேலை கொடுக்கமுடியும். கடைசியாக, எல்லாவற்றிற்கும்மேலாக, இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளுவதன் மூலந்தான், கட்சி ஸ்தாபனத்தில் காணப்படும் பலவீனத்தை சமாளிக்க முடியும்; ஏனென்றால், கட்சி ஊழியர்களுக்குப் பயிற்சிகொடுத்து போதமூட்டுவதற்குச் சரியான வழி-பொது ஜன ஸ்தாபனங்களின் தினசரி நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடச் செய்வதாகும்; கோரிக்கைகளுக்கான போராட்டங்களும், கல்வி, விளையாட்டுப் பந்தயங்கள், நிவாரண வேலை, கூட்டுறவு சாலைகள், கலாச்சாரவேலை ஆகிய பல்வேறு துறைகளில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும்—தினசரி நடவடிக்கைகளில் ஒரு அங்கமாக வேண்டும்.

இன்று, கட்சியை நெருங்கி இழுக்கப்பட்டுவரும் சகல வர்க்கங்கள், பகுதிகளையும் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்களை, இத்தகைய வேலையின் மூலமாகத்தான் பயிற்சிபெறச் செய்து, வேலையில் ஈடுபடுத்த முடியும். அவர்களது திறத்தை எடைபோட்டுப் பார்க்க முடியும். இதைச் செய்யாவிட்டால், அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழியர்களாகமுடியாது; அதற்குப்பதில் கட்சியோடு 'தொடர்பு' மட்டும் கொண்டவர்களாகவும் 'அநுதாபிகளாக' மட்டும் இருந்து கொண்டு, தேர்தல் காலங்கள் போன்ற நாட்களில் 'பொதுவான அரசியல் கிளர்ச்சி'யை மட்டும் நடத்திக் கொண்டிருப்பார்கள். பொதுவாக, இடைவிடாத உறுதியான பொதுஜன நடவடிக்கையில் ஈடுபடுவது, குறிப்பாக பொதுஜன ஸ்தாபனங்களைக் கட்டியமைப்பது என்ற முறைதான் நமது இன்றைய நடைமுறை வேலைக்குத் தேவைப்படும்படியான கேந்திரமான கண்ணோட்டமாகும்.

தொழிலாள வர்க்கத்திற்குத் தனது பாத்திரத்தை உணரும்படி செய்தல்

பொருளாதாரப் போராட்டங்களின் அதிமுக்கியத்துவத்தைப் பற்றி ஏற்கனவே வற்புறுத்திக் கூறியுள்ளோம். இதன் மூலமாகத்தான் தொழிலாள வர்க்கத்தின் ஒற்றுமையைக் கட்டி வளர்க்க முடியும். பல பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க ஒற்றுமை நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன; விரிந்த ஜனநாயக மக்கள் பகுதியின் ஆதரவைப் பெற்ற இந்த நடவடிக்கைகள், அவர்களது உணர்வையும், போராட்ட குணத்தையும் உயர்த்தவும், பொதுஜன ஐக்கியத்தைப் பலப்படுத்தவும் உதவிபுரிந்துள்ளன.

ஆனால், இத்தகைய நடவடிக்கைகளால் மட்டும், தொழிலாள வர்க்கத் தலைமையை ஸ்தாபித்துவிடவோ, இன்றைய நிலைமையின் தன்மையில் மாற்றத்தைக் கொண்டுவரவோ முடியாது. இன்று

தொழிலாள வர்க்கத்திடையே நிலவிவரும் உணர்வைவிட, சகல மக்களையும், குறிப்பாக விவசாயி மக்களையும் பாதிக்கும்படியான மிக விரிந்த ஜனநாயகப் பிரச்சினைகளுக்காக நடத்தப்படும் பொதுஜன அரசியல் நடவடிக்கை மூலமாக வெளிப்படும் உணர்வைவிட—மிக உயர்ந்த தர உணர்வு தேவைப்படுகிறது. நாட்டில் எங்கு பார்த்தாலும் அதிருப்தி குமுறிக்கொண்டிருக்கிற இத்தருணத்தில், ஒரு பொதுஜன சர்க்காரை ஏற்படுத்தவேண்டும் என்பதற்கான போராட்ட எண்ணம் மக்கள் மனதிலே வலுவடைந்து கொண்டுவரும் இத்தருணத்தில், தொழிலாள வர்க்கத்தினுல் மேற்கொள்ளப்படும் பொதுஜன அரசியல் நடவடிக்கையானது, பொதுஜன உணர்ச்சிக்கு உருவமும், வழியும் கொடுத்து உதவுவதற்கு உகந்த மிக வலிமைபொருந்திய ஆயுதமாக இருக்கும்; தொழிலாள வர்க்கத்தின்பால் மக்களை ஒன்று திரட்ட முடியும்; முழு இயக்கத்தின் தரத்தையும் உயர்த்த முடியும்.

உணர்வு பூர்வமான தொழிலாளி வர்க்கத்தினுல்மட்டுமே; மக்களின் தலைவனுக முடியும். இந்த சந்தர்ப்பத்தில், "ருஷ்ய சோஷியல்-டெமாக்கிரடிக் இயக்கத்தில் சீர்திருத்தவாதம்" என்ற கட்டுரையில் லெனின் கூறியுள்ள வாசகங்களை என்றும் மனதில் இருத்திக்கொண்டு அதை தொழிலாள வர்க்கத்திடையே செய்யும் வேலையின் அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

"இப்படிப்பட்ட நிலைமையில், தொழிலாளி வர்க்கத்தின் கடமைகள் மிக மிகத் தெளிவாக உள்ளன. இன்றைய சமூகத்தில்; முன்னுக்குப்பின் முரணில்லாத புரட்சிகரமான வர்க்கம் அதுவாதலால், ஒரு பரிபூரண ஜனநாயகப் புரட்சிக்கான, சகல மக்களின் போராட்டத்தின் தலைவனுகவும், முன்னணிப் படையாகவும் விளங்கவேண்டும்; அடக்குமுறைக்காரர்களையும், சுரண்டல்காரர்களையும் எதிர்த்து சகல பாட்டாளி மக்களும், சுரண்டப்படும் மக்களும் நடத்தும் போராட்டத்தின் தலைவனுகவும், முன்னணிப்படையாகவும் விளங்கவேண்டும். முன்னணிப்படை என்ற பாத்திரத்தை அது எந்த அளவுக்கு உணர்ந்து, அதை நிறைவேற்றச் செயலில் இறங்குகின்றதோ, அந்த அளவுக்கு தொழிலாளிவர்க்கம் புரட்சிகரமானதாக இருக்கும். இந்தக் கடமையை உணர முற்படுகின்ற தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவன், அடிமைத் தனத்தை எதிர்த்து எழுந்துவிட்ட ஒரு அடிமையாவான்; தனது வர்க்கம்தான் முன்னணிப் படையாக விளங்க வேண்டும் என்ற கருத்தை உணராத, அல்லது இந்தக் கருத்தை உதறித் தள்ளுகின்ற தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவன், தனது அடிமை நிலையை உணராத ஒரு அடிமையாவான். அதிகபட்சமாகச் சொல்லவேண்டுமானுல், தனது அடிமை நிலையைச் சீர்ப்படுத்தப் போராடுகின்ற ஒரு அடிமை என்று அவனைச் சொல்லலாமேயொழிய

அடிமைத்தனத்தைக் களைந்தெறியப் போராடுகிறான் என்று சொல்லி விட முடியாது.''

—(மார்க்ஸ்-எங்கல்ஸ்—மார்க்ஸிஸம் பக்கம் 304)

கட்சிக் கல்வியும் சித்தாந்தப் போராட்டமும்

எல்லாத் தோழர்களும் அங்கீகரிப்பதைப்போன்றே, கட்சிக்கல்வி பெறவேண்டிய கடமையானது இன்று அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. இடைவிடா உறுதிநிறைந்த பொதுஜன நடவடிக்கையைத் தயார்செய்யும்படியான—இந்தக் கேந்திரமான கடமையைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, இந்தக் கடமையை நிறைவேற்ற முயல வேண்டும். இன்று கட்சிக்கல்வி பெறுவதின் உடனடியான, பிரதான நோக்கம் என்னவென்றால், அத்தகைய பொதுஜன நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு வழிவகுத்துக் கொடுப்பதாகும். ஆகவே இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவென்றால்—மேல் கமிட்டிகள், "கட்சிக் கல்விக்கான உப-கமிட்டிகளை" மட்டும் அமைத்துவிட்டாலும், அல்லது கட்சியையும், பொதுஜன ஸ்தாபனங்களையும் அமைப்பதற்குப் போதிய அனுபவமில்லாத தோழர்களிடம்—அவர்களுக்கு வேறு இதர குணச்சங்கள் பொருந்தியிருப்பினும்—அந்த வேலையை ஒப்படைத்துவிட்டாலும்,கட்சிக்கல்வி புகட்டும் கடமையை நிறைவேற்றமுடியாது. அதைச் சரிவர, பயன்தரும்படியாகச் செய்ய வேண்டுமென்றால், மேல் கமிட்டிகளால் நேரடியாக, கட்சிக் கல்வி புகட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். கட்சித் தலைவர்கள், பொதுஜனத் தலைவர்களால் அது நடத்தப்படவேண்டும்; வழிநடத்தப்படவேண்டும். பொதுஜன ஸ்தாபனங்களை நடத்துவது பற்றியும், கல்வியும், உடனடியான பிரச்சினைகள்மீது நடத்த வேண்டிய கிளர்ச்சிபற்றியும், குறைகள்பற்றியும் தகவல் சேகரிப்பது எப்படி, அவற்றின்மீது கோரிக்கைகள் வகுப்பது எப்படி என்பது பற்றியும், சாதாரண தொழிற்சங்க உரிமைகள்பற்றி அறிந்துகொள்வதும் கட்சிக்கல்வியில் உள்ளடங்கியதாகும்.

மேலும், கட்சிக்கல்வியின் குறிக்கோள் எப்படியிருக்கவேண்டுமென்றால்:

—கட்சி அங்கத்தினர்கள், அனுதாபிகள், மிலிட்டண்டுகள் ஆகியோரிடையே நிலவும் எழுதப் படிக்கத் தெரியாத நிலையை அறவே நீக்குதல்: சகலகட்சி அங்கத்தினர்களுக்கும், சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம் பற்றிய சாதாரண பொது அறிவையும், தேசிய, சர்வ தேசிய நிலைமைபற்றியும் புகட்டி, அதன்மூலம் பத்திரிகைகளைப் படித்துப் புரிந்துகொள்ள வழி செய்தல்: (தற்சமயம் கட்சி அங்கத்தினர்கள், அநுதாபிகள் ஆகியோர்களில் பெரும்பகுதியினர், குறிப்பாக தொழிலாள வர்க்கத்தையும், விவசாயப் பகுதியையும் சேர்ந்த

வர்களில் பலர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்; இன்னும் பலர் அரைகுறை படிப்புத் தெரிந்த, பத்திரிகைச் செய்திகளைப் படித்துப் புரிந்துகொள்ள முடியாதிருப்பவர்களாகும்)

—மதுரையில் நடைபெற்ற மூன்றாவது கட்சிக் காங்கிரஸ் வகுத்துள்ள கட்சிக் கொள்கையைப்பற்றிய ஒரு சரியான போதத்தை சகல தோழர்களுக்கும் ஊட்டுவது; அதில் குறிப்பாக விளக்கப்பட வேண்டிய பிரச்சினைகளாவன: நமது நாட்டில் சமாதானத்திற்காக நடத்தப்பட வேண்டிய போராட்டத்தின் முக்கியம்; பாக்-அமெரிக்க ஒப்பந்தமும் அதை எதிர்த்து நடத்தும் போராட்டமும்; இந்தியாவில் நடத்தப்பட வேண்டிய அடிப்படையான போராட்டம்—ஏன் அந்தப் போராட்டம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்து நடத்தப்படுகிறது; பொருளாதார நெருக்கடியின் அம்சங்களும், அரசாங்கத்தின் ஐந்து ஆண்டுத் திட்டமும்; விவசாய அமைப்பு முறையும் காங்கிரஸ் சர்க்காரின் சீர்திருத்தங்களும் அவற்றிலுள்ள குறைகளும்; விவசாயப் பிரச்சினையைத் தீர்க்க நாம் சொல்லும் பரிகாரம்—குறிப்பாக சீனாவில் செய்யப்பட்டதென்ன, அதனால் விளைந்ததென்ன என்பதுபற்றி; மக்கள் ஜனநாயக அரசின அம்சங்கள் என்ன, அதற்கும் ஒரு சாதாரண பூர்ஷுவா அரசுக்குமுள்ள வித்தியாசமென்ன என்பதுபற்றியது; மொழிவழி ராஜ்யங்கள் என்ற பிரச்சினையின்மீது கட்சியின் நிலை; அந்தக் கோரிக்கையை நாம் ஏன் ஆதரிக்கிறோம்; முதலாளித்வ தேசியவாதத்தை எதிர்க்கும் போராட்டம் என்றால் என்ன அர்த்தம்; மொழிகள் பற்றிய நமது கொள்கை; இந்தி சம்பந்தமாக கட்சியின் திட்டத்தில் ஏன் திருத்தம் செய்யப்பட்டது; ஐக்கிய முன்னணி என்றால் என்ன அர்த்தம், ஐக்கிய முன்னணி என்று எதை சொல்லக் கூடாது என்பனவெல்லாம் ஒரே தடவை எடுக்கும் வகுப்பில் போதித்துவிடுவதல்ல. ஒவ்வொரு மகாணத்திலுமுள்ள கட்சித் தலைவர்களால்—அந்தந்த மாகாணத்திலுள்ள நிலவரங்கள் புள்ளி விபரங்கள், உதாரணங்களை மிக கவனமாக சேகரித்து, தயார் செய்து ஒழுங்குபடுத்தி, பல வகுப்புகள்மூலம் போதிப்பதாகும்.

—மாகாணத்திலுள்ள சகல அங்கத்தினர்களுக்கும், கட்சிக்கும், பொது ஜனங்களுக்கும் இருக்கும் யதார்த்தமான தொடர்பை விளக்குதல்: கட்சி என்ன என்ன வேலைகளை மேற்கொண்டிருக்கின்றது; பல்வேறு பிரதேசங்களில் பலதரப்பட்ட மக்கள் பகுதியிடையே கட்சிக்குள்ள அந்தஸ்து என்ன; சட்டசபை அரங்கில் அதன் வேலை என்ன என்பதை விளக்குதல்.

—பொருளாதாரம், தத்துவநூல், விஷயங்களை ஆராய்கின்ற முறைகள் ஆகியவைபற்றிய மார்க்சீய போதனைகள் சம்பந்தமாக வகுப்புகளை ஏற்பாடு செய்து, சுயமாகப் படித்துக் கற்றுக்கொள்ள

வேண்டும் என்று வலியுறுத்தி இவைமூலம் மார்க்ஸிஸ-லெனினிஸ உணர்வை ஏற்படுத்துதல்.

இத்தகைய கல்விபெறாமல், சரியான விமர்சனமும், சுய-விமர்சனமும், உண்மையான உள்கட்சி ஜனநாயகமும் இருக்கவே முடியாது என்பதை வலியுறுத்திக் கூறவேண்டும். கீழேயிருந்து உண்மையான உதவிகரமான விமர்சனம் கிடைப்பதற்காகவும்; உண்மையான ஜனநாயகம் நிலவுவதற்காகவுமாவது, குறைந்த பட்ச அளவு அரசியல் கல்விபெற வேண்டியது அவசியமாகும், சாதாரண கட்சி அங்கத்தினர்கள்—மார்க்ஸீய ஞானம் சிறிதாவது பெற்றிருக்கவேண்டும்; கட்சியின் நிலைமையைப் புரிந்திருக்கவேண்டும்; பொதுவாக அரசியல் நிலைமை என்ன? கட்சியின் நடவடிக்கை என்ன என்பதைப் புரிந்திருக்கவேண்டும்; அப்பொழுதுதான், திரிபுகள் ஏதாவது ஏற்பட்டால் அவைபற்றி சரியான விமர்சனம் அவர்களால் செய்யமுடியும்; கட்சி சட்டதிட்டத்தின்படி உத்தரவாத மளிக்கப்பட்டுள்ள ஜனநாயக உரிமைகளை அவர்கள் பிரயோகிக்கமுடியும்.

சித்தாந்தப் போராட்டம் பொதுமக்களிடையே மிகவும் முற்போக்காக வளர்ந்துள்ள சக்திகளுக்கு சித்தாந்தரீதியாக புதிய உணர்வையளிப்பது ஆகியவை, கட்சியைக் கட்டிவளர்ப்பதிலும், பலப்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வகிக்கும். வர்க்கப் போராட்டத்தின் மூன்று பகுதிகளையும் இணைக்கும் உறவில் அவற்றின் மையமாக நிற்பது சித்தாந்தப் போராட்டம்தான். இந்த உணர்வுதான், ஒரு மார்க்ஸீயவாதியை, குட்டி—பூர்ஷுவா தீவிரவாதியிடமிருந்தும், கலாச்சார மற்றவனிடமிருந்தும் வேறுபடுத்திக் காட்டுவதாகும். இந்த சித்தாந்தப் போராட்டத்தை, கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல, சகல கட்சி அங்கத்தினர்களும் நடத்திச் செல்லவேண்டும்; வகுப்புகள் எடுப்பதன்மூலமாக மட்டுமல்ல, இடைவிடாமல், கட்சி அங்கத்தினர்களுக்கும், கட்சி அல்லாத மக்களுக்குமிடையே நடைபெறும் தினசரி சம்பாஷணைகளிலும் நடத்திக் கொண்டேயிருக்கவேண்டும்,

பொருளாதார, அரசியல் போராட்டங்கள் பொதுமக்களை விழிப்படையச் செய்கின்றன; அவர்களது ஐக்கியத்தை உறுதிப்படுத்துகின்றன; அவர்களது தன்னம்பிக்கையை மேலும் உயர்த்துகின்றன; அவர்களை பொதுஜன ஸ்தாபனங்களுக்குள்ளேயும், கட்சிக்கு அருகேயும் கொண்டுவந்து சேர்க்கின்றன. ஆனால் அவர்களில் சிறந்தவர்களை கட்சிக்குள்ளேயே இழுத்து, இரண்டறக் கலக்கவைத்து, கம்யூனிஸ்ட் ஊழியர்களாக மாற்ற வேண்டுமானால், மார்க்ஸீய—லெனினிச அடிப்படையில் நடத்தப்படும் சித்தாந்த வேலைமூலமாகத்தான் முடியும். இந்தக் கடமைக்குப் பிரதான முக்கியத்துவம் கொடுக்கப்படாவிட்டால், கட்சி வளர்ந்து முன்னேறாது. ஏற்கனவே வலியுறுத்தி

யதுபோல, கட்சி வளராவிட்டால், பொதுஜன இயக்கம் முன்னேறாது. ஆகவேதான், இன்றைய சூழ்நிலையில், சித்தாந்த வேலைக்கு தீர்மானமான முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது.

படிப்பாளிகளிடையே நடத்தவேண்டிய சித்தாந்தவேலை

இன்று நமது வேலையில் காணப்படும் மிகப்பெரிய குறைபாடுகளில் ஒன்று—நாட்டில் பெருமளவுக்கு அரசியல் விழிப்பு ஏற்பட்டிருந்தும், சோவியத் யூனியன் தலைமையில் உள்ள சோஷலிச அரசுகள்மீது நட்புறவு வளர்ந்து வந்துள்ளபோதிலும், கம்யூனிஸ்ட் கட்சியின்மீது பெருமதிப்பு ஏற்பட்டுள்ளபோதிலும்,—பொதுவாக படிப்பாளிகளிடையிலும், குறிப்பாக மாணவர்களிடையிலும் நடத்தப்பட்டு வரும் சித்தாந்த வேலை மிகமிகச் சொற்பமாகும் என்பதுதான். உண்மையாக, பல மாகாணங்களில், இந்த வேலை, நிலைமை நமக்கு சாதகமாயில்லாதிருந்த காலத்தைவிட, இன்று அளவிலும் மிகக் குறைவு; தரத்திலும் மிக மிகக் குறைவு. இன்றுள்ள கம்யூனிஸ்ட் மாணவத் தலைவர்களில் பெரும்பாலோருக்கு மார்க்ஸிய ஞானம் மிக குறைவே. சித்தாந்த ரீதியாகத் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் முயல்வதுமில்லை.

இந்தியாவைப் போன்ற அரைக்காலனி நாட்டில், படிப்பாளிகள் பகுதி என்பது மிக முக்கியமான ஒரு பகுதி என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்தப் பகுதியை, குறிப்பாக மாணவர்களை, அவர்களது உடனடிக் கோரிக்கைகளுக்காக மட்டும் நடத்தும்படியான போராட்டத்தின் மூலமாக கம்யூனிசத்தின் பக்கமும், கம்யூனிஸ்ட் கட்சியின் பக்கமும் இழுக்கமுடியாது. அவர்களை இழுக்கவேண்டுமென்றால், குறிப்பாக மிகவும் சிரத்தையுள்ள படிப்பிலே முதிர்ச்சிபெற்ற சக்திகளை கம்யூனிஸ இயக்கத்தின் பக்கம் இழுக்கவேண்டுமென்றால், அவர்களிடையே மிகப்பெரிய அளவிற்கு மார்க்ஸீய அடிப்படையில் சித்தாந்த ரீதியான அரசியல் வேலையைத் தொடர்ந்து செய்துவரவேண்டும். மார்க்சீயத்தின் சரியான தன்மையையும், முதலாளித்வ, குட்டி-முதலாளித்வ கட்சிகள் பிரச்சாரம்செய்யும் தத்துவங்களின் பொய்த்தன்மையையும் அவர்களுக்கு புரியும்படியாக எடுத்துரைத்து உணர்த்தவேண்டும். இந்த வேலையை மிகத் தீவிரமாகச் செய்யாவிட்டால் கட்சி ஊழியர்கள் கிடைப்பதென்ற பிரச்சினையைத் தீர்க்கவே முடியாது. இயக்கம்முழுவதற்கும் மிகப்பெரிய ஆபத்து ஏற்படும். பல மாகாணங்களில் இந்தப் பிரச்சினை பயங்கரமான அளவுக்கு ஏற்கனவே முற்றியுள்ளது.

கட்சிப் பத்திரிகைகளும், பிரசுரங்களும்

கட்சிக் கல்வி, கிளர்ச்சி-பிரச்சார வேலை ஆகியவை போன்றே, கட்சிப் பத்திரிகைகள், பிரசுர சம்பந்தமான வேலையையும்—இடைவிடாத உறுதியான பொதுஜன நடவடிக்கையை வளர்ப்பது என்பதைப் பிரதான கடமையாகக்கொண்டும், இந்த நடவடிக்கைக்கு உதவிகரமாயிருக்கும் என்ற முறையிலும் மேற்கொள்ளவேண்டும். இதைச் செய்யவேண்டுமென்றால்—கட்சிக் கமிட்டிகள், மத்தியக் கமிட்டியும் மாகாணக் கமிட்டிகளும், இந்த வேலைக்கு நேரடியான பொறுப்பை ஏற்று பத்திரிகைகளை நல்ல முறையில் நடத்துவதற்கு உதவி புரிவது தங்களது பிரதானமான கடமை என்று கட்சித் தலைவர்களும், பொதுஜனத் தலைவர்களும் கருதவேண்டும். இதை மிக முக்கியமான கடமைகளில் ஒன்றாக கட்சியின் மேல் கமிட்டிகள் கருதாவிட்டால், பத்திரிகையில் எழுதுவதை, ஒரு முக்கியமான தோழரிடமும், கட்சி வேலையிலும், பொதுஜன வேலையிலும் அதிகம் அனுபவமில்லாத சிலரிடமும் விட்டுவிட்டால், நமது பத்திரிகைகள் பொதுஜனங்களின் போதனாசிரியன், பொதுஜன கிளர்ச்சிக்காரன், பொதுஜன ஸ்தாபன அமைப்பாளன் என்ற பாத்திரத்தை வகிக்க முடியாது. இந்த அம்சத்தில் மிக மோசமான உதாரணம் வேண்டுமென்றால் போலிட் பீரோவும் அதன் அங்கத்தினர்கள்தான் என்றும் சொல்லலாம்.

அரசியல் அறிவு நூல்கள் வேண்டும் என்ற அடங்காத பசி இன்று அதிகமாக ஏற்பட்டுள்ளது. இன்றைய விஷயங்களைப்பற்றிய பிரசுரங்களும் கருத்துக்கள் நிறைந்த நூல்களும், அவை கொஞ்சம் சுமாராக எழுதப்பட்டிருந்தாலும், அதி விரைவில் விற்றுப்போய் விடுகின்றன. இருப்பினும் மத்தியக்கமிட்டியிலிருந்து கீழ்க்கமிட்டிகள் வரைக்கும் பொதுவாக கட்சிப் பிரசுரங்கள் என்றாலும், குறிப்பாக கட்சிப் பத்திரிகைகள் என்றாலும் ஒரு அலட்சியப் போக்கு நிலவி வருகின்றதைப் பார்க்கலாம். அவற்றின் உள்ளடக்கமும், செய்தியைப் பிரசுரிக்கும் முறையும்' எழுதப்படும் நடையும் அவற்றை எப்படி திறம்பட நடத்துவது, மக்களுக்குச் சிறந்த முறையில் அவை சேவை செய்வதற்கு வழிவகைகள் எப்படி, புதிய அம்சங்களைச் சேர்ப்பது எப்படி, புதிய பிரதேசங்களில் இயக்கம் வளர்வதற்காக என்ன செய்வது, பத்திரிகைகள் சம்பந்தமாக ஊழியர்கள், நிதிநிலைமை பற்றிய பிரச்சினை போன்றவை கட்சிக்கமிட்டிகளில் விவாதிக்கப்படுவதில்லை; அல்லது விவாதித்தாலும் ஏனோதானோவென்று விவாதித்து, நடைமுறையில் அநேகமாக எந்தவிதமான நடைமுறை ஏற்பாடுகளுக்கும் வராமல் போகிறது. மத்தியக் கமிட்டி அங்கத்தினர்களும், பொலிட் பீரோ அங்கத்தினர்கள்கூட, கட்சியின் மத்தியப் பத்திரிகைகளான—மாத இதழுக்கோ, வார இதழுக்கோ அநேகமாக எழுதுவது கிடையாது; அல்லது பிர

சங்கள் எழுதுவதற்கும் ஒப்புக்கொள்வதில்லை. இதே மாதிரிதான், மாகாணப் பத்திரிகைகள் சம்பந்தமாக மாகாணக் கமிட்டிகள் கடைப்பிடித்து வரும் போக்கும் இருந்து வருகின்றது. பத்திரிகைகளை முன்னேற்றமுறச் செய்து, வளர்க்கும் கடமையைப் பற்றிய இந்தப் போக்கு, கட்சி தாள்களைப் பிரசுரிக்கும் கடமை சம்பந்தமான இந்த மனோபாவம்-கிளர்ச்சியில் வாய்க்கு வந்ததையெல்லாம் அளந்துவிடுவதிலும், தானாக எல்லாம் வந்துவிடும் என்பதிலும் ஏற்பட்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. பொதுஜன உணர்வை உருவாக்குதல் என்பதன் பிரதான அவசியத்தை அறிந்துகொள்ளத் தவறியதை வெளிப்படுத்துகின்றது. ஆகவே, இந்த விதமான போக்கிற்கு ஒரு தடை போட்டு நிறுத்திவிட்டால், எழுச்சியை ஒன்று திரட்டுவது, அதை ஒரு குறிப்பிட்ட திசையில் செலுத்துவது, பொதுஜன இயக்கத்திற்கு புரட்சிகரமான அம்சங்களைச் சேர்ப்பது என்று நீளமாகப் பேசுவதெல்லாம், வெறும் பேச்சாகத்தான் நின்றுவிடும்.

நமது அடிப்படையான மக்கள் பகுதியின்மீது நமக்கிருக்க வேண்டிய பார்வை

கட்சி வேலையில்-பொதுஜன வேலை, கட்சிக் கல்வி, கிளர்ச்சி வேலை, ஸ்தாபன ரீதியான வேலை ஆகியவற்றில்—தொழிற்சாலைகள், சங்கங்கள், போக்குவரத்துகளில் ஈடுபட்டுள்ள தொழிலாள வர்க்கமும், கிராமப்புறங்களிலுள்ள ஏழை விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் ஆகிய அடிப்படையான மக்கள் பகுதிகளிடையே நடத்தப்படும் வேலையில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். இது நடைமுறையில் பிரதிபலிக்கவேண்டும்—இந்த வேலைக்கு ஊழியர்களையும், நிதியை ஒதுக்குவதிலும், இந்த வர்க்கங்களின் குறிப்பிடத் தக்க கோரிக்கைகள்மீது கவனம் செலுத்துவதிலும் இது காணப்படவேண்டும். விவசாய ஒற்றுமைபற்றிய சந்தர்ப்பவாதப் போக்குகளை நாம் எதிர்க்கவேண்டும்; இந்த அரை-தொழிலாள வர்க்கப்பகுதிகள் “ஏற்கனவே நம்மிடம் வந்துவிட்டன”, ஆதலால் “அவர்களது கோரிக்கைகள்மீது விசேஷ கவனம் எதுவும் எடுத்துக்கொள்ள அவசியமில்லை” என்ற தவறான கருத்து சில பிரதேசங்களில் பரவியுள்ளதை விட்டொழித்தாக வேண்டும். இந்த நிலைமையை இப்படிப் பச்சையாக உண்மையில் நாம் வரையறுக்கா விட்டாலும், நமது பிரசங்கிகளில் பலரும், நமது பத்திரிகைகளில் பலவும், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் ஆகிய மிகவும் அடக்கி ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வரும் பகுதியினரின் பிரச்சினையை அநேகமாக எடுத்துக்கொள்வதேயில்லை; அவர்களை வாட்டி வரும் சமூக கொடுமைகள் பற்றிக்கூட வாய்திறப்பதேயில்லை.

ஸ்தாபனரீதியான தலைமைக்குரிய சரியான வழிமுறைகள்

பொருளாதார, அரசியல், சித்தாந்த ரீதியான மூன்று அரங்கங்களிலும், ஒவ்வொரு துறையிலும், இத்தகைய இடைவிடாத உறுதியான பொதுஜன வேலையை மேற்கொள்வதன் மூலமாகத்தான், கட்சியானது, முன்னேற்றப் பாதையில் சென்று வளர்ந்து பலமடையும்; ஜனநாயக அணி கட்டியமைக்கப்படும்; தொழிலாளி வர்க்கத் தலைமை நிலைநாட்டப்படும். இவ்வாறுதான், ஜனநாயக இயக்கமானது, காட்டாற்று வெள்ளம்போலப் பாய்ந்து முன்னேறும்; அளவிலே உயர்ந்து ஓங்கி, ஒரு பொதுஜன புரட்சி இயக்கத்தின் அம்சங்களைத் தாங்கி நிற்கும்.

இந்த அடிப்படையான கடமைக்கு உகந்தமாதிரி, கட்சிக்கு முன்னுள்ள ஸ்தாபனரீதியான பிரச்சினைகளைச் சமாளித்துத் தீர்க்க முற்படவேண்டும். அதாவது, ஒவ்வொரு அரங்கத்திலும், மிக விரிந்த அளவில் இடைவிடாத உறுதியான பொதுஜன நடவடிக்கையாக வளரும்படியான அளவுக்கு, மேலிருந்து கீழ்வரை, கட்சியை அமைத்தாகவேண்டும். அதற்கு, கட்சிக்குள்ளே ஸ்தாபனரீதியான தலைமைக்கான சரியான வழிமுறைகளை அமைத்துக்கொள்வதுதான் மிக முக்கியமாகத் தேவைப்படுவதாகும்.

இதன் அர்த்தம் என்ன? கீழ்க்கமிட்டிகளை மேல் கமிட்டிகள் எவ்வாறு வழி நடத்தவேண்டும் என்பனவெல்லாம், 1954 ஏப்ரலில் நடந்த மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் இறுதியாக்கப்பட்ட நமது கட்சியின் ஸ்தாபனம் பற்றிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள கட்சிக் கமிட்டிகள் கட்சியின் தினசரி பொதுஜன நடவடிக்கைகளை நேரடியாகத் திட்டமிட்டு வழி காட்டவேண்டும்; அகில இந்திய அன்றாட பொதுஜன நடவடிக்கையை மத்தியக் கமிட்டி ஒழுங்கு செய்து நடத்திச்செல்லவேண்டும்; மாகாண அன்றாட பொதுஜன நடவடிக்கையை, மாகாணக் கமிட்டி ஒழுங்கு செய்து நடத்திச்செல்லவேண்டும் என்ற ஒரு போக்கு நமது கட்சி அணிகளுக்கிடையே பரந்து காணப்படுகின்றது. இந்தப் போக்கின்படி பார்த்தால்—தொழிற்சங்கம், விவசாய சங்கம், மாணவர், இளைஞர் போன்ற பல்வேறு அரங்கங்களில் கட்சி நடத்துகின்ற பொதுஜன நடவடிக்கைகளை, பிரதானமாக ஏற்பாடு செய்து இணைப்பது மேல் கமிட்டிகள் என்று ஆகிறது. துணை நடவடிக்கையாக மேல் கமிட்டிகள் மேற்கொள்ள வேண்டியவை யாதெனில், ஒரு கீழ்க் கமிட்டியானது தவறிழைக்கும்போது அல்லது அரசியல், ஸ்தாபன வித்தியாசங்கள் ஏற்படுவதனால் முளைக்கும் பிரத்தியேகமான கஷ்டங்களைச் சமாளிக்கும் வகையில் "தலையிடுவது" தான் என்று ஆகிறது.

இந்தப் போக்கு தவறானது. ஒரு பக்கத்தில் பார்த்தால், பொதுஜன ஸ்தாபனங்களின் அலுவல்களைக் கட்சிக்கமிட்டிகள் கைப்பற்றிக் கொள்வதில் கொண்டுவிடுகிறது; மறு பக்கத்தில் பார்த்தால், கீழ்க் கட்சி யூனிட்டுகளுக்கு வழிகாட்டி, அவற்றை நன்கு அமைத்துப் பலப்படுத்தும்படியான அதி முக்கியமான கடமையைச் செய்வதினின்றும் மேல் கட்சிக் கமிட்டிகளைத் தடைசெய்வதாகின்றது. இவ்வாறு ஜனநாயக இயக்கத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதற்குப் பலம் வாய்ந்ததாக வளர்க்கப்படவேண்டிய கட்சி யூனிட்டுகள், தம்மால் இயன்ற அளவு செயல்படும்படி விடப்படுகின்றன; அதே சமயத்தில் பொதுஜன ஸ்தாபனங்கள், கட்சியின் அணை உறுப்புகளாக மாறுவதற்கு ஏதுவாகின்றன. இது, கட்சிக்குத் தீங்கிழைப்பதாகும்; பொதுஜன ஸ்தாபனங்களுக்கும் தீங்கிழைப்பதாகும்.

கட்சியைப் பலப்படுத்தும் கடமை, கட்சி யூனிட்டுகளைப் பலப்படுத்தும் கடமை, எல்லா மட்டங்களிலும் செய்யப்படவேண்டிய மிக மிக முக்கியமான கடமை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு செய்ய முற்படாவிட்டால், உண்மையாக முன்னேறுவதென்பது சாத்தியமேயில்லை. அதாவது, எலலாவற்றிற்கும் மேலாக, கட்சி ஸ்தாபன அமைப்பில் மத்தியக் கமிட்டியானது, உண்மையாகவே வழிநடத்துகின்ற உறுப்பாக இயங்கவேண்டும். மாகாணக் கமிட்டிகளும், இதுமாதிரியே, தங்களுக்குக் கீழுள்ள யூனிட்டுகளைப் பொறுத்தவரையில் இயங்கவேண்டும். கட்சியின் அடிப்படை யூனிட்டுகளான—செல்களைப் பலப்படுத்தும் கடமையில் சகல யூனிட்டுகளும் முழு கவனம் செலுத்தவேண்டும்; ஏனென்றால் அந்த செல்களின் உறுதியும், பொதுஜனங்களோடு அவை கொண்டுள்ள உறவுகளும்தான் கட்சியின் பலத்தை முடிவு கட்டவேண்டும்.

ஸ்தாபன தீர்மானம் குறிப்பிட்டுக்காட்டுவதுபோல—இது (இப்படிக் கூறுவது) பொதுஜன இயக்கம், பொதுஜன ஸ்தாபனங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளவேண்டிய பொறுப்பை, மத்தியக் கமிட்டியும், மாகாணக் கமிட்டிகளும் தட்டிக் கழித்துவிடலாம் என்று அர்த்தமல்ல. அதற்கு நேர்மாறாக, அவற்றின் கடமை—பொதுஜன ஸ்தாபனங்களில் வேலைசெய்யும் தோழர்களுக்கு விரிந்த அளவில் வழிகாட்டுவதும், இயக்கத்தை மேலும் முன்னேறச்செய்து, பொதுஜன ஸ்தாபனங்களை பலப்படுத்துவதற்கானமுறையில் கட்சி யூனிட்டுகளையும் கட்டி அமைப்பதுமாகும்.

தற்சமயம், கீழ்க்கமிட்டிகளுக்கு மேல்கமிட்டி அடிக்கடி கொடுக்கும் தலைமை வெறும் எட்டுச்சுரைக்காய்போன்ற தலைமைதான்—பொதுவான சம்பாஷணைகள்மூலம் அல்லது தொடர்ச்சியாக அனுப்பப்படும் சுற்றறிக்கைகள்மூலம் தரப்படும் தலைமைதான்; இது ஏன் தவிர்க்கமுடியாதென்றால், கீழ் யூனிட்டுகளைப்பற்றி மேல் யூனிட்டுகளுக்கு சரிவர விஷயம் தெரியாததாலும், பல மாகாணங்களிலும்,

ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள பல்வேறு பிரதேசங்களிலும் பல தரப்பட்ட மட்டத்தில் இயக்கம் இருப்பதாலுமாகும். இத்தகைய நிலைமையில் வேலையைச் சரிபார்ப்பது—ஞாபகமூட்டும் சர்க்குலர்கள் ரிபோர்ட்டுகள் அனுப்பும்படியான வேண்டுகோள்கள், எப்பொழுதாவது பிரதேசங்களுக்கு விஜயம்செய்வதுபோன்ற ரூபங்களை மேற்கொள்ளுகின்றன. ரிபோர்ட் அனுப்பப்பட்டாலுங்கூட, அவற்றை கவனமாகப் படிப்பதில்லை; அல்லது அவற்றை அனுப்பிய யூனிட்டோடு விவாதிப்பதுமில்லை; வேலையிலுள்ள குறைபாடுகளை எப்படி நீக்குவது என்பதற்கான அனுபவரீதியான ஆலோசனைகளும் கொடுக்கப்படுவதில்லை.

புதிய பகுதிகளில், திட்டமிடப்பட்ட விரிவான வேலை நடைபெறுவதில்லை; மற்றப் பகுதிகளைவிட பலம்வாய்ந்த பகுதிகளில் திட்டமிடப்பட்ட முறையில் கட்சியையும், கட்சி நடவடிக்கைகளையும் பலப்படுத்துவதன்மூலம் அந்தப் பகுதியை ஒரு உறுதியான தளமாக்க முயற்சி செய்வதில்லை; குறிப்பிட்ட பகுதிகள், வட்டாரங்களின் முக்கியத்துவத்தைக் கருதி, திட்டமிடப்பட்டமுறையில் ஊழியர்களை அனுப்புவது, பணஉதவி அளிப்பது ஆகியவற்றிற்கும் ஏற்பாடு செய்வதில்லை. அதிகபட்சமாகக் கூறவேண்டுமானால் கீழ் கமிட்டிகளுக்கு வழிகாட்டுதல் என்ற முறையில், ஏதாவது அரசியல் தவறுகள் நிகழும்பொழுது அவற்றைத் திருத்துவது என்பதுதான் நடைபெறுகிறது. இம்மாதிரி கட்சிக்கு வழிகாட்டும் முறை முழுக்க முழுக்கத் தவறு. ஆனால் கட்சிக் கமிட்டிகள், உண்மையில் பொதுஜன ஸ்தாபனங்களால் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினைகளில் மூழ்கினால், கட்சி ஸ்தாபனத்தைப்பற்றிய பிரச்சினைகளில் ஈடுபட அவற்றிற்கு நேரம் கிடைக்காமல்போவது தவிர்க்கமுடியாதாகிறது. ஸ்தாபன தீர்மானம் குறிப்பிட்டுக்காட்டுவதுபோல, கட்சியை நடத்துவதற்கான நாம் தற்சமயம் அனுஷ்டிக்கும் முறையானது, ஏதோ தன்னிச்சையாக நடக்கும் செயலில் நம்பிக்கை வைக்கின்ற அலங்கோலத்தை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

உடனடிக் கோரிக்கைகளுக்காக நடக்கும் பொதுஜனப் போராட்டத்தைப்பற்றி, பொதுஜன ஸ்தாபனங்கள், அடிப்படையான மக்கள் பகுதிபற்றிய பார்வைவேண்டும் என்று அறிவித்துவிடுவதுமட்டும் ஒரு மேல்கமிட்டி செய்கின்ற வேலையாகாது. குறிப்பிட்ட பிரதேசத்திற்குரிய பொதுவான கோஷங்களை வகுப்பதனமூலம் அதை நடைமுறையில் எப்படிச் செய்யவேண்டும் என்று காட்டவேண்டும். இயக்கத்திற்கு மிகவும் சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் கட்சிவேலையை பலப்படுத்தவேண்டும் என்று அது சொல்லிவிடுவது மட்டும் போதாது. அப்படிப்பட்ட பிரதேசங்களைப்பற்றி அது ஆராய்ந்தறியவேண்டும். அதை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை (ஊழியர்கள், நிதி, முதலில் எந்தப் பகுதிகளில் கவனம்

செலுத்தவேண்டும், எந்தக் கடமைகளில் கவனம் செலுத்தவேண்டும் என்பனவற்றை) என்னென்ன எடுக்கலாம் என்று யோசனை கூற வேண்டும். ஸ்தலப் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு, போராட்டத்தை வளர்க்கவேண்டுமென்றுமட்டும் மேல்கமிட்டி சொன்னால் போதாது. குறிப்பிட்ட பிரதேசத்தில் உடனடியாக எந்த ஸ்தூலமான பிரச்சினைகளை மேற்கொள்ளுவது என்று முடிவுசெய்வதற்கு கீழ்க்கமிட்டிக்கு அது உதவவேண்டும். கிளர்ச்சி ஸ்தூலமான முறையில் இருக்கவேண்டும் என்று மேல்கமிட்டி அறிவித்துவிட்டால் மட்டும் போதாது. சில பிரச்சினைகளில், இந்தக் கிளர்ச்சியை எப்படி நடத்திச்செல்லவேண்டும் என்று சில அனுபவம்வாய்ந்த தோழர் மூலம் எடுத்துக்காட்டவேண்டும். புதிய பகுதிகளுக்கு கட்சி வேலையை விஸ்தரிக்கவேண்டும் என்று மட்டும் மேல்கமிட்டி சொல்லிவிட்டால் போதாது. இந்த விஸ்தரிப்பையே எப்படித் திட்டமிடுவது என்று காட்டி, அதை நிறைவேற்றுவதற்குரிய வழிமுறையையும் அது வகுக்கவேண்டும். கட்சிக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினால் மட்டும் மேல் கமிட்டியின் வேலை தீர்ந்ததாகாது; பாடக் குறிப்புகளை அது தயாரித்து, கீழ்க்கமிட்டியிலுள்ள ஊழியர்களுக்கு கட்சிக் கல்வி போதிப்பதை மேற்கொள்ளவேண்டும். ஒரு யூனிட், மற்றொரு யூனிட்டின் அனுபவத்திலிருந்து கற்றறியவேண்டும் என்று மேல் கமிட்டி சொன்னால் மட்டும் போதாது; ஒரு யூனிட்டின் அனுபவத்தை, இதர எல்லா யூனிட்டுகளுக்கும் கிடைக்கும்படி அது செய்ய வேண்டும்.

நடைமுறை தலைமையை மேற்கொள்வது கீழ்க் கமிட்டிகளுக்கு மேல் கமிட்டிகள் அனுபவரீதியான ஆலோசனைகள் அளிப்பது—ஜனநாயக இயக்கத்திற்கு தொழிலாள வர்க்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் தலைமை தாங்குவதற்கான அத்தியாவசியமான நிபந்தனையாகும்.

ஆனால், இந்தத் தலைமை, மேல் கமிட்டிகள் கூறும் இந்த ஆலோசனை, ஏதோ சொல்லிக் கொடுத்துச் செய்விப்பது என்று அர்த்தமாகாது. கீழ்க் கமிட்டிகளுக்காக மேல் கமிட்டிகள் முடிவுகள் எடுப்பதென்றோ, அவை செய்யவேண்டிய வேலையை மேல் கமிட்டிகள் செய்வதென்றோ ஆகாது. கீழ்க்கமிட்டிகள், தங்களது பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ளவும், செயல்பட உந்தம் திறனைப் பெறுவதற்கும் உதவும்படியான தன்மை கொண்டதாக அது இருக்கவேண்டும். ஆனால், ஸ்தலத்திலேயே செயல்பட முன்கை எடுக்கும் திறனைப் பெருக்குவது என்ற சாக்கைச் சொல்லிக் கொண்டு, வெறும் "பொதுப்படையான ஆலோசனையை" மட்டும் அளிப்பதில் மேல் கமிட்டிகள் திருப்திப்பட்டுக் கொண்டிருக்குமாயின் முன்கையெடுக்கும் திறமை வளராது; இயக்கமும் பலவீனப்பட்டுக் கொண்டே போகும்.

மேலும், சகல மட்டங்களிலும், அத்தகைய நடைமுறை ஆலோசனைகள் அளிக்கப்படாவிட்டால், தோழர்களின் திறனை பரீட்சிக்கவும் தலைமை தா யார் மிகவும் தகுதி என்று சோதித்தறியவும், யார் யாருக்கு என்ன என்ன குணாம்சங்கள் பொருந்தியுள்ளன என்று கணிக்கவும், ஊழியர்களைப் பொறுத்தமட்டில் ஒரு சரியான கொள்கையை வரையறுக்கவும் முடியாது போய்விடும்.

இன்றைய நிலைமையில் எல்லா அம்சங்களிலும் மேலாக, கட்சி தான் மிகவும் தீர்மானமான அம்சம் என்பதைப் பல தடவைகளில் நாம் கூறி வந்திருக்கிறோம். கட்சியைக் கட்டி யமைப்பதுதான் மிக முக்கியமான கடமை என்பதைப் பல தடவைகளில் கூறி வந்திருக்கின்றோம். ஆனால், மேல் கமிட்டிகளுக்கும், கீழ்க் கமிட்டிகளுக்கும் இடையே இன்று நிலவிவரும் உறவைக் கவனித்தால், அதை எவ்வளவுதூரம் நாம் முழுதும் புரிந்துகொள்ள வில்லையென்பது நன்கு புலனாகும்.

கட்சி, விதிமுறைப்படி இயங்கும் ஸ்தாபனங்களைக் கொண்டதும் அவற்றின் தொகுப்புமாகும். கட்சியைக் கூட்டி வளர்ப்பது என்பது, சரியான "பொதுப்படையான ஆலோசனை" அளிப்பது மட்டும் என்பதோ அல்லது பொது கோஷங்களை வகுத்துத் தருவது என்பதோ அர்த்தமல்ல. மேலிருந்து கீழ்வரை—கட்சி யூனிட்டுகளை—கட்சி ஸ்தாபனங்களை பலப்படுத்திக் கட்டி வளர்ப்பதென்று அர்த்தமாகும். இது தன்னிச்சையாக ஒரு நாளும் நடந்துவிடாது; உணர்வு பூர்வமான ஆலோசனை மூலமாகவும், மேலிருந்து, மேல்கமிட்டிகளிடமிருந்து ஸ்தூலமான உதவி பெறுவதன் மூலமாகவும் செய்யப்பட வேண்டியதாகும்.

கட்சியை வழிநடத்தும் முறைகள் சாதிப்பதற்கு நமக்கு வேண்டிய கண்ணோட்டம் இதுதான். அப்பொழுதுதான், கட்சிக்கு முன்னுள்ள அரசியல் கடமைகளை நிறைவேற்ற முடியும்; கட்சி ஒரு பொதுஜன சக்தியாக வளரமுடியும்; அதன் மூலமாகத்தான், ஜனநாயக முன்னணியை மேலும்மேலும் பல[illegible] தொழிலாள வர்க்கத் தலைமையை நிலைநிறுத்[illegible]

ஜனசக்தி பிரஸ், [illegible]

இலங்கை இந்தியர் பிரச்சினைபற்றி

நேரு கொத்தலாவலையின் புதிய உடன்பாடு

பழைய ஒப்பந்தத்தின் புதிய பல்லவியே

- இலங்கை இந்தியர் பிரச்சினை என்ன ?
- அதன் அடிப்படைகள் என்ன ?
- தீர்ப்பதற்குரிய ஜனநாயக வழி எது ?

எல்லோரும் கேட்கும் கேள்வி இது!

தோழர் கே. ராமநாதன்

எழுதிய

இலங்கை இந்தியர் பிரச்சினை

விலை 2 அணா

விளக்கமாகப் பதில் கொடுக்கிறது ! இன்றே வாங்கிப் படியுங்கள் !!

கிடைக்குமிடம்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

மவுண்ட்ரோடு : : சென்னை - 2.